# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 06.08.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 219 பக்கங்கள் : 12







# தமிழ் பொது வேட்பாளர் நாளை அறிவிக்கப்படலாம்!

## தமிழ் பொதுக் கட்டமைப்பு அறிவிப்பு

● இருவரின் பெயர் பரிசீலனையில்

- பா. பிரசன்னா -

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 06

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளர் யார் என்று நாளை புதன்கிழமை தவறினால் நாளை மறுதினம் வியாழக்கிழமை அறிவிக்கப்படுவார் என்று தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு அறிவித்துள்ளது.

11



# பொதுஜன பெரமுன ரணிலுக்கு எவ்வகையிலும் ஆதரவளிக்காது

## உதயங்க வீரதுங்க திட்டவட்டம்



கொழும்பு, ஓக. 06

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு பொதுஜன பெரமுன எந்த வகையிலும் ஆதரவளிக்காது என ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவில் இருந்து யார் வெளியேறினாலும் எமக்கு சவாலாக அமையாது. வரலாற்றில் ரணில் விக்கிரமசிங்க தவறான தீர்மானங்களையே மேற்கொண்டார்.

சுதந்திரக்கட்சி பிளவடைந்தமை ஐக்கிய தேசியக் கட்சி இன்று

11

# ஓக. 14 முதல் வடக்கு, கிழக்கில் கனமழை கிடைக்க வாய்ப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 06

எதிர்வரும் 14ஆம் திகதி முதல் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கு மிதமானது முதல் கனமானது வரையான மழை கிடைக்க வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

வெப்ப சலனம் மற்றும் காற்று வேக மாறுபாடு காரணமாகவே இந்த மழை கிடைக்கப்பெறும். உள் நிலப்பகுதிகளில் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஏனைய பகுதிகளுடன்

11

# அர்ச்சுனாவின் பிணை மனு நிராகரிப்பு!

மன்னார், ஓக. 06

மருத்துவர் அர்ச்சுனாவின் பிணை கோரிக்கையை நிராகரித்த மன்னார் நீதிவான் நீதிமன்றம் அவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

மன்னார் பொது மருத்துவமனையின்

11

# 100 இற்கு மேற்பட்ட பெரமுன எம்.பிக்கள் ரணிலுக்கு ஆதரவளிப்பதற்கு தீர்மானம்!

## அமைச்சர் காஞ்சன விஜயசேகர தகவல்



கொழும்பு, ஓக. 06

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்கு பொதுஜன பெரமுனவின் நூற்றுக்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வந்துள்ளனர் என அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஜனாதிபதிக்கு

11

# முன்னாள் படையினர் ஜே. வி. பியின் பக்கம்!

## அநுரகுமார திஸநாயக்கா

கொழும்பு, ஓக. 06

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்கு ஓய்வுபெற்ற முப்படையினரும் வெளிநாடுகள் வாழ் இலங்கையர்களும் அதீத செல்வாக்கு செலுத்துவர் என்று அரச புலனாய்வுத்துறை தெரிவித்ததாக அநுரகுமார திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

அரச புலனாய்வு பிரிவின் சமீபத்தைய

11



# பங்களாதேஷில் இராணுவ ஆட்சி!

## பிரகடனப்படுத்தினார் தளபதி

* பிரதமர் இந்தியாவுக்கு தப்பினார்!

டாக்கா, ஓக. 06

பங்களாதேஷில் இராணுவ ஆட்சி நடைமுறைக்கு வந்துள்ளதாக அந்த நாட்டின் இராணுவத் தளபதி வாக்கர் உஸ் - ஷமான் நேற்று மாலை அறிவித்தார்.

இதேநேரம், மாணவர்களின் போராட்டத்தையடுத்து பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தனது பதவியை இராஜினாமா செய்தார். தொடர்ந்து, தலைநகர் டாக்காவிலிருந்து வெளியேறிய அவர் இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளார். தற்போது திரிபுராவில் தங்கியுள்ள அவர், அங்கிருந்து லண்டன்

11

# கட்டுப்பணம் செலுத்தினார் பீல்ட் மார்ஷல் பொன்சேகா!

கொழும்பு, ஓக. 06

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சுயாதீன வேட்பாளராக கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

இதன்படி, ரணில் விக்கிரமசிங்க, சரத் கீர்த்திரத்ன, ஓஷல ஹேரத், ஏ. எஸ். பி. லியனகே, சஜித் பிரேமதாச, பீ. டபிள்யூ. எஸ். கே. பண்டாரநாயக்க, விஜயதாச ராஜபக்ஷ, கே.கே. பியதாச, சிறிதுங்க ஜயசூரிய, அஜந்த டி சொய்சா, கே. ஆனந்த குலரத்ன, சரத் மனமேந்திர, வணக்கத்துக்குரிய

11

# வேறு நிலையங்களில் வாக்களிக்க முடியாது

## தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, ஓக. 06

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர் ஒருவர் நாட்டின் எந்தவொரு வாக்களிப்பு நிலையத்திலும், வாக்களிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வெளியாகும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவையெனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவ்வாறான எந்தவொரு தீர்மானமும்

11

# திராய்க்கேணி படுகொலை 34ஆவது நினைவேந்தல் இன்று

காரைதீவு, ஓக. 05

அம்பாறை - திராய்க்கேணி படுகொலையின் 34ஆவது ஆண்டு நினைவுதினம் இன்றாகும். படுகொலை இடம்பெற்ற முத்துமாரி அம்மன் ஆலய பகுதியில் நினைவேந்தலை முன்னெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த, 1990 ஓகஸ்ட் 6ஆம் திகதி திராய்க்கேணியை இராணுவத்தினர் சுற்றிவளைத்தனர். அங்கு நுழைந்த முஸ்லிம் ஊர்காவல் படையினர் மற்றும் குண்டர்கள் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்த 54 பொதுமக்களை சுட்டும் - வெட்டியும் கொன்றனர்.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

லண்டனிலிருந்து நண்பர் ஒருவர் முகநூல் உள்பெட்டி யில் ஒரு பதிவை எழுதியிருந் தார். திறந்து படித்தால், அது இந்தப் பத்தியில் கடந்த இரு பத்தி இரண்டாம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி ஊர்க்குருவி எழுதியிருந்த பதிவு. சரியாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதியது. அதனை அனுப்பியிருந்த நண்பர் இந்த சமூகத்தின்மீது மிகுந்த அக்கறை உள்ளவர். எதற்காக அனுப்பினார் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

அவர் அனுப்பியிருந்த ஊர்க் குருவியின் அந்தப் பதிவை மீண் டும் அப்படியே கீழே தருகின்றேன்.

அவர் ஒரு மூத்த ஊடகர். ஊடகர் என்றோ அல்லது அரசியல் விமர்சகர் என்றோ அவரை சுருக்கிவிடமுடியாது. தமிழ் அரசியல்வாதிகள் ஒவ்வொருவருடனும் நெருங்கிப் பழகுபவர். அவர்களைப் பற்றி மிக ஆழமாக அறிந்து வைத்திருப்பவர்.

நேற்றுக் காலை அவரை நித்திரையால் எழுப்பி இரண்டு கேள்விகள் கேட்டேன்.

முதலாவது கேள்வி: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கூட்டமைப்பினர் சந்தித் தபோது அதில் கலந்து கொண்ட சுமந்திரன்,

"நாங்கள் ஜனாதிபதி தெரிவின் போது உங்களுக்கு வாக்களிக்கவில்லை. ஆனாலும் நீங்கள்தான் இப்போது ஜனாதிபதி என்பதால் எங்கள் பிரச்னைகளை உங்களிடம் சொல்லி அவற்றுக்கு தீர்வு கேட்டுப் பேச வந்தோம்", என்று கூறினாரென செய்திகள் வெளிவந்திருக்கின்றனவே. அவர் எதற் காக இப்படி சொல்லியிருப்பார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?" என்றேன்.

அடுத்த கேள்வியையும் கேட்பதற்கு முதலே அவர், பேசத் தொடங்கிவிட்டார்.

"இரண்டாயிரத்து பத்திலிருந்து பதினைந்து வரை மகிந்தர் ஜனாதிபதியாக இருந்தபோது, அவரைக் கூண்டில் ஏற்றுகின்றோம் என்று கூறிக்கொண்டு, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையிலேயே காலத்தைக் கடத்தினார்கள். அப்போது, ஜனாதிபதியுடன்தான் நமது பிரச்னைகளை பேச வேண்டும் என்று சிந்திக்கவில்லை. பின்னர் மகிந்தவை விழுத்துகிறோம் என்று நல்லாட்சியில் மைத்திரியை கொண்டுவந்தார்கள். ஆனால், மைத்திரி – ரணில் கூட்டாட்சியின்போது பிரதமராக இருந்த ரணிலுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு, மைத்திரியை ஆறடி மண்ணுக்குள் அனுப்புவோம் என்றதோடு மட்டுமல்லாமல், அவரை நாய் என்று பொதுவெளியில் வார்த்தைகளைக் கொட்டினார்கள். அந்த ஐந்து ஆண்டுகளிலுமே ரணிலை பாதுகாப்பதைப் பற்றி மாத்திரமே சிந்தித் தார்களே தவிர, தமிழ் மக்களைப் பற்றி சிந்திக்கவே இல்லை.

பிறகு என்ன நடந்தது, கோட்டாபய ஜனாதிபதித் தோல்தலில் போட்டியிட்டபோது, அவரே வெற்றி பெறுவார் என்று முழுநாட்டுக்கும் தெரிந்திருந்த போதிலும் அவர்கள், தோல்விய டைவார் என்று நம்பப்பட்ட சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளித்தார்கள். கடைசியில் என்ன நடந்தது? கோட்டாபய வெற்றி பெற்ற பின்னர், அவருடன் பேசு வதற்காக அவரின் கதவு எப்போது திறக்கும் என்று வாசல்படியில் காத்திருந்தார்கள்.

கோட்டாபயவை வீட்டுக்கு அனுப்புகின்ற போராட்டத்தில் தமிழ் மக்கள் அக்கறை காட்டாதபோதிலும், போராட்டக்காரர்களை சந்திப்பதும் அவர்களை உசுப்பேற்றுவதுமாக அங்கும் இங்கும் ஓடித்திரிந்தார்கள்.

பிறகு என்ன நடந்தது, அவர் போய் ரணில் வந்ததும் தமது தனிப்பட்ட பகைமை காரணமாக ரணிலுக்கு எதிராகப் போராட்டக்காரர்களை உசுப்பேற்றியதோடு, அவரை ஒருநாள்கூட ஜனாதிபதி பதவியில் அமர இடமளிக்காதீர்கள் என்று பகிரங்கமாகப் போராட்டக்காரர்களிடம் கோரிக்கை விட்டதோடு நின்றுவிடாமல், பாராளுமன்றத்தில் நடந்த தேர்தலில் நடுநிலைமை வகிக்காமல் ரணிலுக்கு எதிரான வேட்பாளரை ஆதரிக்க முடிவெடுத்தார்கள்.

ரணில்தான் வெற்றிபெறுவார் என்பது அரசியலில் குழந்தைகளுக்கும் தெரிந்திருந்தபோதிலும் அவரை எதிர்க்க முடிவெடுத்தார்கள்.

இப்போது ரணில் ஜனாதிபதி ஆனதும் அவருடன் பேசுவதற்கு சென்றிருக்கிறார்கள். சென்ற பின்னரும் அரசியல் இராஜதந்திரத்தில் தமது ஆற்றாமையை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

அரசியல் இராஜதந்திரம் என்பது சுமந்திரனிடம் அறவே இல்லை என்பதை அவர் கடந்த காலங்களில் ஒவ்வொரு கட்டத்திலும் நிரூபித்துக்கொண்டே இருக்கின்றார்" என்றார் அவர்.

சரி, அவர்களிடம்தான் இராஜதந்திரம் இல்லையென்றால், ரணில் எதற்காகக் கூட்டமைப்பிலும் சிலர் தனக்குத்தான் வாக்களித்தார்கள் என்று கூறினார். இரகசிய வாக்கெடுப்பில் கூட்மைப்பினர் அப்படி வாக்களித்தார்கள் என்பது அவருக்கு எப்படித் தெரிந்தது? என்றேன் நான்.

"ரணில் அரசியல் அனுபவத்தோடும் – அரசியல் இராஜதந்திரத்தோடும் கலாநிதி பட்டதாரி என்றால், நம்மவர்கள் முன்பள்ளி அனுபவத்தோடு நிற்கிறார்கள்.

ரணில் எப்படி பதில் சொன்னார்? கூட்டமைப்பு எம். பிக்களில் சிலர், தமிழ் மக்களின் நலன் கருதி எனக்குத்தான் வாக்களித்தார்கள் என்றுதான் கூறினார். அவர் அவ்வாறு கூறியதன் மூலம் ரணில் சொல்ல வருவது என்ன?

டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளிப்பது என்று முடிவெடுத்தவர்கள் தமது சொந்த சுயநலன்கருதி அப்படியொரு முடிவை எடுத்தபோது, கூட்டமைப்பிலுள்ள சிலர் தமிழ் மக்களின் நலன் சார்ந்து நின்று அப்படி முடிவெடுத்தார்கள் என்கிறார் ரணில்.

அவருக்குத்தானே தெரியும், தனது நல்லாட்சி அரசில் எப்படி தனக்கு ஆதரவாக பல தடவை கள் கூட்டமைப்பினர் வாக்க ளித்தார்கள்? யாருடைய நலனை அவர்கள் முன்னிறுத்தினார்கள் என்று? அதுதான் அவர் அப்படி அழுத்தம் திருத்தமாக கூட்டமைப் பினர் சிலர் தமிழ் மக்களின் நல னுக்காக தனக்கு வாக்களித்தார்கள் என்றிருக்கிறார்" என்றார் அவர்.

அந்த லண்டன் நண்பர் அனுப்பியிருந்த பத்தி இதுதான். சுமந்திரன் தனது அரசியல் வாழ்க்கையில் செய்தவை எல்லாமே தவறானவைதான் என்பதை சுட்டிக்காட்டிய இந்தப் பத்தியை அனுப்பியிருந்த நண்பருடன் பின்னர் பேசினேன். அப்போது அவர் சொன்னார், சுமந்திரன் செய்த தவறுகளில் முக்கியமானது மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்த முடியாதவாறு புதிய சட்டத்தை ரணிலுடன் சேர்ந்து நல்லாட்சி காலத்தில் கொண்டு வந்தது. அன்று அவர் செய்த தவறுக்கு இன்று பிராயச்சித்தம் தேடவிருக்கிறார். இன்று பாராளுமன்றில் விவாதத்துக்கு எடுக்கப்பட விருக்கும் சுமந்திரனின் தனிநபர் சட்டம் இன்று நிறைவேறினால் மாகாண சபைகளுக்கும் விரைவில் தேர்தல் நடக்கலாம். அவர் இப்போது தனது தவறுகளுக்கு பிராயச்சித்தம் தேடத் தொடங்கியிருக்கிறார் அல்லவா. அதையும் நீங்கள் இந்தப் பத்தியில் குறிப்பிட வேண்டும் என்பதற்காகவே அனுப்பினேன் என்றார்.

**- ஊர்க்குருவி.**

# பிணைமுறி மோசடியில் ரணிலை ஒருபோதும் குற்றஞ்சாட்டவில்லை

## பந்துல குணவர்த்தன தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 06

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமீது நான் ஒருபோதும் குற்றம் சுமத்தவில்லை - என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன், பிணை மோசடிக்கு ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்ட நபர்களே பொறுப்பு என்றும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை ஊடகங்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஒழுங்கு விசாரணைகளில் கலந்து கொள்ளுமாறு எனக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை. மத்தியக் குழுக் கூட்டத்தில், சிறீ லங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து தேர்தலில் போட்டியிட ஒரு வேட்பாளரை நியமித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தோம். ஒழுக்காற்று விசாரணைகளுக்கு நாங்கள் ஒப்புக்கொண்டுள்ளோம். ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க நாங்கள் எந்த தவறும் செய்யவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை உயர்த்தும் திட்டத்தை முன்வைத்து சட்டமாக்கியுள்ளார். ஒரு கட்சி மற்றும் மத்திய குழு உறுப்பினர்கள் அடிமைகள் அல்லர். நாம் முடிவுகளை எடுக்கும்போது, நாட்டின் எதிர்காலத்துக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமே தவிர, ஆளுமைகளுக்கு அல்ல. உண்மையில், நாங்கள் ஒரு தேசிய வேலைத்திட்டத்தை ஆதரிக்கின்றோம், ஜனாதிபதியை அல்ல - என்றும் அவர் கூறினார். (ஐ)

# போதைசார் குற்றங்கள் 687 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஓக. 06

நாடளாவிய ரீதியில் நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 687 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட் டவர்களில் 683 ஆண்களும் நான்கு பெண்களும் அடங்குவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 9 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், இருவர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 184 கிராம் 058 மில்லி கிராம் ஹெரோயின், 265 கிராம் 946 மில்லி கிராம் ஐஸ், 204,667 கிராம் 845 மில்லி கிராம் கஞ்சா மற்றும் 2,029 கஞ்சா செடிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

# தாளையடி கிராமத்தை தனியானதொரு கிராம சேவகர் பிரிவாக மாற்ற எதிர்ப்பு!

## மருதங்கேணி மக்கள் நேற்று போராட்டம்



யாழ்ப்பாணம், ஓக. 06

தாளையடி கிராமத்தை தனியான கிராம சேவகர் பிரிவாக மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக மருதங்கேணி கிராம மக்கள் நேற்று காலை 9:30 மணிமுதல் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மருதங்கேணி கிராம சேவகர் பிரிவு காணப்படுகின்றது.

இக் கிராம சேவகர் பிரிவில் மருதங்கேணி வடக்கு, மருதங்கேணி தெற்கு, தாளையடி என்கின்ற மூன்று கிராமங்கள் அடங்குகின்றன.

இந்நிலையில், தாளையடி என்ற சுமார் 140 குடும்பங்களைக் கொண்ட கிராமத்தை தனியான கிராம சேவகர் பிரிவாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் இரகசியமாக மேற்கொண்டு வருவதாக தெரிவித்து, மருதங்கேணி வடக்கு, மருதங்கேணி தெற்கு கிராம மக்கள் போராட்டம் நடத்தினர்.

இதில் மருதங்கேணி எங்கள் சொத்து இதனை ஒருநாளும் பிரிக்க இடமளிக்க மாட்டோம், தாளையடியில் கடல் நீரை நன்னீராக மாற்றும் திட்டத்திற்காக எமது பாரம்பரிய நிலங்களை அபகரிக்காதே, உங்கள் டீலுக்காக தாளையடி கிராமத்தை பிரிக்காதே, மருதங்கேணி எங்கள் பூர்வீக சொத்து, உங்கள் நலனுக்கு எங்கள் பிரதேசம் லஞ்சமா, எல்லை நிர்ணயம் செய்தபோது அயல் கிராமங்களை அழைக்காதது ஏன்? என்றவாறு பல்வேறு கோஷங்களை எழுப்பியதுடன் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை பிரதேச செயலாளரிடம் கையளித்தனர். (அ)

# ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 06

இந்த ஆண்டின் கடந்த ஜூன் மாத இறுதிக்குள், நாட்டின் மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு 5.6 பில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது.

இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வாரத்தில் அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி 7.1 வீதத்தால் அதிகரித்துள்ளது.

மேலும் யூரோ, ஸ்ரேலிங் பவுண்ட்ஸ், ஜப்பானிய யென் மற்றும் பிற முக்கிய நாணயங்களுடன் ஒப்பிடுகையில் ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# யானை தாக்கி ஒருவர் பலி!

கொழும்பு, ஓக. 06

அநுராதபுரம், நொச்சியாகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக நொச்சியாகம பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம், நொச்சியாகம பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் தனது காணிக்குச் சென்று மீண்டும் வீடு நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கும் போது காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து, காயமடைந்தவர் நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
06.08.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், ஆடி 21

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பங்களாதேஷ் ஓர் எச்சரிக்கை?

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் களம் எவ்வாறு அமையும் என்பதை எவராலும் எதிர்வுகூற முடியாதுள்ளது. எவ்வாறான முடிவுகளும் ஏற்படலாம் - ரணில் தென்னிலங்கையில் அதிகம் பணியாற்றுவதை விடவும் வடக்கு - கிழக்கிலேயே நேரத்தை செலவிட்டு வருகின்றார். தேர்தல் களம் பல முனைப் போட்டியாக மாறியுள்ள நிலையில் தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தப்போகும் அரசியல் விளைவுகள் உன்னிப்பாக அவதானிக்கப்படும். யார் வெற்றிபெற வேண்டும் என்பதை விடவும் யார் வெற்றி பெறக்கூடாது என்பதிலேயே வெளித்தரப்புகள் கவனம் செலுத்துவார்கள்.

இந்தியாவின் அயல் நாடுகளில் ஏற்படும் அரசியல் கொந்தளிப்புகள் மிகவும் சிக்கலானவையாக இருக்கின்றன. மாலைதீவின் சீன சார்பு ஜனாதிபதியால் ஏற்பட்ட அரசியல் கொளந்தளிப்புகள் அடங்குவதற்கு முன்பதாக, பங்களாதேஷை இராணுவம் பொறுப்பேற்றிருக்கின்றது. பிரதமர் ஷேக் ஹசினா நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றார். இலங்கையில், 69 இலட்சம் சிங்கள மக்களின் ஆதரவில் வெற்றி பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ மக்கள் கிளர்ச்சியின் மூலம் வெளியேற்றப்பட்டமையைத் தொடர்ந்து மீண்டும் மக்கள் ஆணையுடன் நாட்டை ஆளப் போவது யார் என்னும் கேள்விக்கான பதிலாகவே ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

கோட்டாபயவுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியில் பிரதான பங்குவகித்த ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே. வி. பி.) செல்வாக்கு முன்னர் எப்போதும் இல்லாதவாறு அதிகரித்திருப்பதாகக் கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன. இந்த நிலையில் ஜே. வி. பி. இலங்கையின் அதிகார அரசியலில் பிரதான சக்தியாக மாறியிருக்கின்றது. ஜே. வி. பி. அதிகாரத்தைக் கைப்பற்றுவதை வெளித்தரப்புகள் எவ்வாறு எடுத்துக்கொள்ளும் என்னும் பெரிய கேள்விக்கு மத்தியில்தான் ஜனாதிபதித் தேர்தல் உற்றுநோக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் சூழலில் இலங்கையுடன் இராணுவ ரீதியான ஒத்துழைப்புகளை மேம்படுத்திக்கொள்ள சீனா எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் குறிப்பிட்டிருக்கின்றார். இது ஒரு செய்தியை கூறுகின்றது. இலங்கை போன்ற சிறிய நாடுகளுடன் இராணுவ ரீதியான ஒத்துழைப்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை இல்லை. ஆனாலும் சீனா அவ்வாறான ஆர்வத்தை வெளியிடுவதானது, இந்தியாவுக்கு நெருக்கடிகளைக் கொடுக்கும் நோக்கம் கொண்டது என்பது வெள்ளிடைமலை.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, இலங்கையின் அதுவரையான புவிசார் அரசியல் முக்கியத்துவம் முற்றிலுமாக மாறிவிட்டது. சீனா ஒரு தவிர்க்க முடியாத ஆட்ட நாயகனாக தன்னை ஸ்தாபிப்பதில் குறிப்பிடத்தக்களவு வெற்றியைப் பெற்றிருக்கின்றது. அந்த வெற்றியை ஓர் எல்லைக்குள் முடக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு உண்டு. இந்த விடயத்தில் இந்தியாவால் ஓர் எல்லைக்கு மேல் சகித்துக்கொள்ள முடியாது.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் மாலைதீவின் தேர்தல் முடிவுகள் இந்தியாவுக்கு ஓர் எச்சரிக்கையாக மாறின. இந்தியாவின் பாதுகாப்பில் முற்றிலுமாக தங்கியிருந்த ஒரு சிறிய நாடு இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதும் - சீன சார்பு நிலைப்பாட்டை வெளிப்படையாக மேற்கொண்டமையும் தெற்காசிய அரசியலில் ஒரு சிவப்பு எச்சரிக்கையாகியது.

இவ்வாறானதொரு பின்புலத்தில், இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் இந்தியாவின் உடனடி மற்றும் நீண்டகால பிராந்திய நலன்களுடன் பின்னிப்பிணைந்திருக்கின்றது. அதற்காக பெரியளவிலான தலையீடுகள் நிகழ்ந்துவிடும் என்று உடனடியாகக் கூறிவிட முடியாது. ஆனால், நிலைமைகள் எல்லை மீறினால் தலையீடுகளை தவிர, வேறு வழிகளும் இருக்காது. அவ்வாறானதொரு சூழலில் தமிழ் மக்கள் மேசையில் பலமாக இருக்கும் நிலைமை உருவாகலாம்.

# மன்னார் இளம் தாய் உயிரிழப்பு நீதியான விசாரணை நடக்கும்!

### மருத்துவமனை பணிப்பாளர் உறுதி

மன்னார், ஒக. 06

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் இளம் தாய் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணைகள் முடிவடைந்ததும் உரியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் - இவ்வாறு உறுதியளித்துள்ளார் அந்த மருத்துவமனையின் பணிப்பாளர் அஸாத் எம். ஹனீபா.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் குழந்தை பிரசவித்த இளம் தாயான மரியராஜ் சிந்துஜா கடந்த 27ஆம் திகதி உயிரிழந்தார்.

அன்றைய தினம் கடமையில் இருந்த மருத்துவர் மற்றும் பணியாளர்களின் அசண்டையீனத்தாலேயே அவர் உயிரிழந்தார் என்று பெண்ணின் குடும்பத்தினர் குற்றஞ்சுமத்தியுள்ளனர். அத்துடன், இது தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பல தரப்பட்டவர்களும் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு சென்று பணிப்பாளர் மற்றும் பணியாளர்களுடன் இந்த விடயம் குறித்து உரையாடினார்.

இதன்போது, பெண்ணின் மரணம் குறித்து நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். உரிய தரப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து மக்கள் மத்தியில் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைமீது உள்ள அவநம்பிக்கை தகர்த்தெறியப்பட வேண்டும் - என்றும் கூறினார்.

(ஐ)

# பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரி வீதி உரிய தரத்தில் திருத்தப்படவில்லை!

### அதிகாரிகள் முன்பு நிரூபித்த இளைஞர்கள்



யாழ்ப்பாணம், ஒக. 06

பண்டத்தரிப்பு - வடலியடைப்பு ஆஸ்பத்திரி வீதி திருத்தப் பணிகள் உரிய தர நிர்ணயத்தின் அடிப்படையில் நடைபெறவில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி வீதியின் திருத்தப் பணி உலக வங்கியின் நிதி ஒதுக்கீட்டில் வலி. தென்மேற்கு பிரதேச சபை மற்றும் உள்ளூராட்சி திணைக்களத்தின் மேற்பார்வையில் கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி ஆரம்பமானது.

ஆனால், இந்த வீதியின் தரம் தொடர்பில் பொதுமக்களிடையே சந்தேகம் எழுந்தது. இதையடுத்து, இளைஞர்கள் சிலர் பொறியியலாளர், பிரதேச சபையின் செயலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் முன்னிலையில் வீதியை தரப் பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது, குறித்த வீதி உரிய தர நிர்ணய அடிப்படையில் திருத்தம் செய்யப்படவில்லை என்று தெரிய வந்தது.

(ஐ)

## மேலும் சில பெரமுன எம்.பிக்களை வளைத்துப்போட ரணில் திட்டம்!

கொழும்பு, ஒக. 06

பொதுஜன பெரமுன கட்சியின் மேலும் சில பாராளுமன்ற உறுப்பினர்களை வளைத்துப் போடுவதற்குரிய நகர்வுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருகின்றார் என தெரியவருகின்றது.

இதன்படி எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் மேலும் 10 எம்.பிக்கள்வரை ரணில் பக்கம் செல்வார்கள் என அறியமுடிகின்றது.

இந்நிலையில் மொட்டு கட்சி எம்.பிக்களை தமது பக்கம் தக்க வைத்துக்கொள்வதற்கும், ரணில் பக்கம் சென்றவர்களை மீள வளைத்துப் போடுவதற்கும் பஸில் ராஜபக்ஷ நேரில் களமிறங்கியுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 06 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - ஆடி 21
நல்ல நேரம் : 07.31 - 09.30
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : துவிதியை




**மேடம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வாகனத்தை சீர் செய்வீர்கள். அரசு காரியங்கள் நல்லவிதத்தில் முடியும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். மதிக்கப்படுவீர்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதங்கள் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**சிம்மம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**கன்னி**
எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

**துலாம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**விருட்சிகம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பழைய தள்ளிப்போன விஷயங்கள் எளிதில் முடியும். தொழில் திருப்தி உண்டாகும்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். நிதானம் தேவைப்படும்.

**மகரம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும்.

**கும்பம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப்பார்.

**மீனம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

# யாழ்ப்பாண தமிழர்களை போல் தமிழை யாரும் நேசிக்கவில்லை

## உயர் நீதிமன்ற நீதிபதி சுரேஷ்குமார்

மதுரை, ஒக. 06

யாழ்ப்பாணத் தமிழர்களைப் போல் தமிழ் மண்ணில் பிறந்தவர்கள் தமிழை நேசிக்கவில்லை. கொண்டாடவில்லை என்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆர். சுரேஷ்குமார் தெரிவித்தார்.

உயர் நீதிமன்ற மதுரை அமர்வின் மதுரை சட்டத்தரணிகள் சங்கம் சார்பில் சட்டத்தரணி பிரபுராஜதுரை எழுதிய "நும்மினும் சிறந்தது நுவ்வை" என்ற நூல் அறிமுக விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆங்கிலம் பிழைப்புக்கான மொழி. ஆங்கில மொழியை தவிர்த்துவிட்டு பிழைப்பு நடந்த முடியாத அளவுக்கு ஆங்கிலம் நம் வாழ்வுடன் இரண்டறக் கலந்துவிட்டது. பிழைப்பு என்ற விஷயத்தை தாண்டி பிறப்பு, வளர்ப்பு, வாழ்க்கை, முகவரி என வரும்போது நமக்கு துணை வருவது தமிழ் தான்.

நமக்கு முகவரியாகவும், முகமாகவும் இருக்கும் தமிழ் மொழியை கற்க வேண்டும். அதற்காக தமிழில் புலமை பெற வேண்டிய அவசியம் இல்லை. எண்ணிலடங்கா தமிழ் இலக்கியத்தில் ஏதாவது ஓர் இலக்கியத்தை படித்துவிட்டாலே பிறந்த பலனை அடைந்ததாக அர்த்தம்.

இன்றைய தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், மேடைப் பேச்சாளர்களை நம்பி தமிழ் மீது நாட்டம் கொள்ள முடியுமா? அவர்கள் பேசுவது முழுவதும் தமிழ் அல்ல. முழுக்க முழுக்க தமிழில் பேசுவது, உரையாடுவது, அலுவல் பணி தவிர அனைத்து செயல்களையும் தமிழில் செய்வதும், தமிழை பரப்புவதும் இலங்கையைச் சேர்ந்த யாழ்ப்பாணத் தமிழர்கள் தான். யாழ்ப்பாணத் தமிழர்களைப் போல் தமிழ் மண்ணில் பிறந்தவர்கள் தமிழை நேசிக்கவில்லை, கொண்டாடவில்லை.

தமிழ் இலக்கியங்களை படிக்க வேண்டும். திருக்குறளை படித்தால் கொஞ்சம் கொஞ்சமாக தமிழ் மீது பற்றும், ஈர்ப்பும் வரும்- என்றார். (எ)

# "சீமானை நீதிமன்றில் சந்திப்பேன்"

திருச்சி, ஒக. 06

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், கட்சி நிர்வாகியும் மயிலாடுதுறை மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டவருமான காளியம்மாளை விமர்சித்துப் பேசியதாக குரல்பதிவு வெளியானது. இந்த நிலையில், சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது, அந்த குரல்பதிவு வெளியாக காரணம் திருச்சி பொலிஸ் அதிகாரி தான் என்று சீமான் மறைமுகமாக தாக்கிப்பேசியது சமூக



வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது.

இந்த நிலையில், சீமான் உரையாற்றிய வீடியோவை தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் பகிர்ந்துள்ள திருச்சி எஸ். பி. வருண்குமார், "பொதுமேடையில் பேசினாலும் கொச்சையான பொய்களை தமிழக மக்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். ஜனநாயகம், நீதிமன்றங்கள் மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. சீமானுக்கு எதிராக ஏற்கனவே எனது சட்டத்தரணி மூலம் குற்றவியல் அவதூறு நோட்டீஸ் அனுப்பியுள்ளேன். அவரை நீதிமன்றத்தில் சந்திப்பேன்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)




சென்னையைச் சேர்ந்த தாயும் மகளும் ஒன்றாக அழகிப் போட்டியில் பங்கேற்றதோடு, மிஸ் மற்றும் மிஸ்ஸஸ் அழகிப் போட்டிகளில் பட்டங்களை வென்று அசத்தியுள்ளனர்.

# தமிழகம் புறக்கணிப்பு ம. தி. மு. க. ஆர்ப்பாட்டம்



சென்னை, ஒக. 06

மத்திய பட்ஜெட்டில் தமிழகம் புறக்கணிக்கப்பட்டதை கண்டித்து எதிர்வரும் 14ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என ம. தி. மு. க. பொதுக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (எ)

# கருணாநிதியின் நினைவாக தி. மு. க. அமைதிப் பேரணி!

சென்னை, ஒக. 06

மறைந்த முதல்வர் கருணாநிதியின் 6ஆவது ஆண்டு நினைவு நாளையொட்டி தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையில் நாளை 7ஆம் திகதி அமைதிப் பேரணி நடைபெறும் என்று தி. மு. க. சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (எ)

# போலி பேராசிரியர்கள் விவகாரம் ஆளுநரிடம் அறிக்கை சமர்ப்பிப்பு

சென்னை, ஒக. 05

தனியார் பொறியியல் கல்லூரிகளில் போலி பேராசிரியர்கள் நியமன விவகாரம் தொடர்பில் தமிழக ஆளுநரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர். வேல்ராஜ் தெரிவித்தார்.

சென்னை வேப்பேரி கால்நடை மருத்துவக் கல்லூரியில் "மருத்துவ மாணவர்களுக்கான பண்ணை மற்றும் செல்லப்பிராணிகள் நடைமுறை" என்ற தலைப்பிலான ஒருநாள் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானபோது...!

# தமிழ் பொதுவேட்பாளருக்கு வாக்கு; எனது கருத்தை திரிபுபடுத்தி பிரசாரம்!

## விக்னேஸ்வரன் எம். பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 06

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது தொடர்பில் நான் தெரிவித்திருந்த கருத்துகள் பற்றி தவறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.



அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த கேள்வி -பதிலிலேயே மேற்கண்டவாறு கூறினார். அதில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகங்கள் ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தும் போது ஒட்டு மொத்த தமிழ் மக்களும் அந்த வேட்பாளருக்கே தமது வாக்குகளை அளிக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கை. விருப்பு வாக்கை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைக்கு உட்பட்ட விடயம். இது தொடர்பில் அவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும். இன்னாருக்குத்தான் தமிழ் மக்கள் தமது விருப்பு வாக்களிக்க வேண்டும் என்று நான் எந்த கோரிக்கையோ அல்லது ஆலோசனையோ முன்வைக்கவில்லை.

பல கேள்விகள் பத்திரிகையாளர்களால் முன்வைக்கப்படும்போது எமது அடிப்படை குறிக்கோள்களை நாங்கள் சிதைத்திருப்பதாக எனது பதில்களை திரித்து வெளியிடும் பழக்கம் சில ஊடக சகோதரர்களுக்கு உண்டு என்பதைக் காணமுடிகின்றது.

ஆனால் அவை என்னுடைய கருத்துக்கள் அன்று - என்றுள்ளது.

(ஐ)

# மக்கள் போராட்ட முன்னணியின் கொள்கை அறிக்கை வெளியீடு!

யாழ்ப்பாணம், ஓக. 06

மக்கள் போராட்ட முன்னணியின் கொள்கை அறிக்கை வெளியிடும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவன் போபகே, புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா. செந்தில்வேல், மக்கள் போராட்ட முன்னணியின் தேசிய நிறைவேற்று குழு உறுப்பினர்களான ராஜ்குமார் ரஜீவ்காந், துமிந்த நாகமுக, சுவஸ்திகா அருலிங்கம் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

இதன்போது கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவன் போபகே கொள்கை அறிக்கை புத்தகத்தை வழங்கினார்.

(ஐ)






# கடைகளில் கைவரிசை காட்டிவந்த இருவர் கைது!

## ஒருவர் 14 வயது சிறுவன்

முல்லைத்தீவு, ஓக. 06

புதுக்குடியிருப்பில் ஐந்து கடைகளிலும் கோயில் ஒன்றிலும் திருடிய என்ற குற்றச்சாட்டில் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். 14 வயது சிறுவனும் 24 வயது இளைஞருமே இவ்வாறு சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர்.

புதுக்குடியிருப்பு சந்தி, மருத்துவமனை முன்பாக, மந்துவில், காமன்ஸ் பகுதி, செம்மண்குன்று பகுதிகளிலுள்ள கடைகளிலும் புதுக்குடியிருப்பு நாகதம்பிரான் ஆலயத்தில் உண்டியலை உடைத்து பணம், பொருட்கள் களவாடப்பட்டன.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் நிலைய பொறுப்பதிகாரி எம். பி. ஆர். ஹேரத் தலைமையிலான பொலிஸார் சந்தேகநபர்களை கைது செய்தனர்.

கைதானவர்களிடம் இருந்து 46 ஆயிரத்து 230 ரூபாய் பணம் திருடப்பட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

14 வயது சிறுவனும் 24 வயது இளைஞரும் இணைந்தே இந்தத் திருட்டில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# விக்கிரமபாகு கருணாரட்னவுக்கு யாழ்ப்பாணத்தில் நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், ஓக. 06

மறைந்த நவ சமாய கட்சியின் தலைவரும் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்தவருமான விக்கிரமபாகு கருணாரட்னவுக்கான அஞ்சலி நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்வு தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், விக்கிரமபாகு கருணாரட்னவின் திருவுருவப்படத்துக்கு பொது மக்களால் மற்றும் தமிழ் தேசிய பசுமை இயக்கத்தால் சுடரேற்றி மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.



இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கருத்துரை வழங்கினார்.

இந்த நிகழ்வில், தமிழ்த் தேசிய செயல்பாட்டாளர் இரேனியஸ், நவ சமாய கட்சியின் பொதுச் செயலாளர் ரணத் குமாரசிங்கவும் பங்கேற்றார்.

(ஐ)

# காதல் விவகாரத்தால் இளைஞர்மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஓக. 06

பிறந்தநாள் வீட்டுக்கு சென்றுவிட்டு திரும்பியவரை இரும்புக் கம்பிகளால் தாக்கியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். காதல் விவகாரமே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என்று தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு அரியாலையில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரியை சேர்ந்த குறித்த இளைஞரும் அவரின் நண்பர்களும் ஹைஏஸ் வாகனத்தில் பிறந்தநாள் நிகழ்வுக்கு சென்றுவிட்டு திரும்பியபோது குழு ஒன்று அவர்களை வழிமறித்தது. வாளைக் காட்டி அவர்களை அச்சுறுத்திய குழுவினர் இளைஞரை வானிலிருந்து வெளியே இறக்கி இரும்புக் கம்பிகளால் தாக்கியது. இதில், படுகாயமடைந்த இளைஞரை நண்பர்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

காதல் விவகாரமே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என்றும் இளைஞரின் காதலியின் உறவினர்களே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று கூறப்பட்டது.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சி வரிசையில் அமரத் தயாராகிறார் நாமல்?

கொழும்பு, ஓக. 06

**சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாமல் ராஜபக்ஷவின் அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் அமர தயாராகி வருகின்றனர் பெரமுன கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன.**

இதேநேரம், அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று இராஜாங்க அமைச்சர்கள் இன்னும் சில தினங்களில் அமைச்சுப் பதவிகளை இராஜிநாமா செய்வார்கள் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று இராஜாங்க அமைச்சர்கள் இன்னும் சில தினங்களில் அமைச்சுப் பதவிகளை இராஜிநாமா செய்வார்கள் என்று ஆளும்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் முரண்பாட்டால் அவர்கள் தமது அமைச்சு பதவிகளை இராஜிநாமா செய்ய தயாராகி வருகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன தனியான ஜனாதிபதி வேட்பாளரை முன்னிறுத்த வேண்டும் என்றும் அவர்கள் மூவரும் வலியுறுத்தியுள்ளனர். (ஐ)



## பிரதமரை சந்தித்தார் இந்தியத் தூதுவர்

கொழும்பு, ஓக. 06

இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, அலரி மாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவை நேற்று சந்தித்தார்.

இருவரும் இருதரப்பு உறவுகள் மற்றும் பொருளாதார மற்றும் கலா சார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்து கலந்துரையாடினர் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)



## முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹஷான் சஜித் அணியில்!

கொழும்பு, ஓக. 06

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களில் ஒருவரான ஹஷான் திலகரத்ன எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் "நாட்டை கட்டியெழுப்பும் பயணத்துக்கு" ஆதரவளிக்கும் நோக்கில் நேற்று திங்கட்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் மகளிர் அணியின் பயிற்றுவிப்பாளராக தற்போது ஹஷான் திலகரத்ன கடமையாற்றி வருகிறார்.

அத்தோடு, ஹஷான் திலகரத்னவின் பாரியாரும் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் ஏற்பாட்டாளருமான அப்சாரி சிங்கபாகு திலகரத்னவும் நேற்றைய தினம் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்டார்.

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 17,140,354 பேர் வாக்களிக்கத் தகுதி

கொழும்பு, ஓக. 06

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக நாட்டின் அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை 17,140,354 என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்கெடுப்பு மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு : -

1. கொழும்பு - 1,765,351
2. கம்பஹா - 1,881,129
3. களுத்துறை - 1,024,244
4. கண்டி - 1,191,399
5. மாத்தளை - 429,991
6. நுவரெலியா - 605,292
7. காலி - 903,163
8. மாத்தறை - 686,175
9. அம்பாந்தோட்டை - 520,940
10. யாழ்ப்பாணம் - 593,187
    யாழ்ப்பாணம் மாவட்டம் - 492,280
    கிளிநொச்சி மாவட்டம் - 100,907
11. வன்னி - 306,081
    வவுனியா மாவட்டம் - 128,585
    மன்னார் மாவட்டம் - 90,607
    முல்லைத்தீவு மாவட்டம் - 86,889
12. மட்டக்களப்பு - 449,686
13. அம்பாறை - 555,432
14. திருகோணமலை - 315,925
15. புத்தளம் - 663,673
16. குருணாகல் - 1,417,226
17. அநுராதபுரம் - 741,862
18. பொலநறுவை - 351,302
19. பதுளை - 705,772
20. மொனராகலை - 399,166
21. இரத்தினபுரி - 923,736
22. கேகாலை - 709,622

# விட்ட தவறுகளைச் சரி செய்ய பொது வேட்பாளரே ஒரே தெரிவு

### ஐங்கரநேசன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 06

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் கட்சிகளாக அல்லாமல் இனமாகச் சிந்தித்தால் தமிழ்ப் பொதுவேட்பாளரே ஒரேயொரு தெரிவாக இருக்க முடியும் என தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கலாநிதி விக்கிரமபாகு கருணரட்னவின் நினைவுகூர் நிகழ்வு நேற்று முன்தினம் திருநெல்வேலியிலுள்ள தனியார் விடுதியொன்றில் இடம்பெற்றது.

இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

தமிழ்த்தரப்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்ற எண்ணக்கரு 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் முன்வைக்கப்பட்டது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அவர்களின் உரிமைப் போராட்டத்தைத் தொடர்ச்சியாக ஆதரித்து வந்த விக்கிரமபாகு கருணரட்ண தமிழ்தரப்பின் பொது வேட்பாளராக முன்மொழியப்பட்டும் இருந்தார்.

ஆனால் இதனைத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கருத்தில் எடுக்காது முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் நேரடியாகவே பங்கேற்ற சரத்பொன்சேகாவை ஆதரிப்பதாக முடிவெடுத்தனர்.

தமிழ் மக்களைச் சரத்பொன்சேகாவுக்கு வாக்களிக்கவைத்துப் பெரும் வரலாற்றுத் தவறிழைத்தனர். தற்போது, சரத் பொன்சேகா இராணுவம் குற்றமிழைத்திருந்தால் தமிழ் மக்கள் எவ்வாறு தனக்கு வாக்களித்திருக்க முடியும் என்று கேள்வி எழுப்புகின்றார்.

மேட்டுக்குடி தமிழ் அரசியல்வாதிகள் எப்போதும் தெற்கில் ஐக்கிய தேசியக்கட்சியையே ஆதரித்து வருகின்றார்கள். ரணில் விக்கிரமசிங்கவுக்காகவே யுத்தத்தை முன்னெடுத்த தளபதிக்கு இரத்த நெடில் அகல முன்பாக வாக்குக் கேட்டார்கள். அத்தேர்தலில் விக்கிரமபாகு கருணரட்ன போட்டியிட்டுச் சில ஆயிரக்கணக்கான வாக்குகளையே பெற்றிருந்தார்.

அவருக்குத் தமிழ் மக்கள் ஆதரவளித்திருந்தால்கூட பேரினவாதத்தை எதிர்த்து அவரால் வெற்றிபெற்றிருக்க முடியாது. ஆனால், அவரை நாம் ஆதரித்திருந்தால் அவரைப்போன்று தமிழ் மக்களின் போராட்டத்தை ஏற்றுக்கொண்டு ஆதரிக்கக்கூடிய பல விக்கிரமபாகுக்களைத் தென்னிலங்கையில் நாம் உருவாக்கியிருக்க முடியும். இவரின் மறைவோடு சிங்கள மக்கள் மத்தியில் எங்களுக்காகப் பேசி வந்த ஒரேயொரு குரலும் இல்லாமற் போய்விட்டது.

மாகாண சபைத்தேர்தலைத் திட்டமிட்டு நடத்தாமல் விட்டவர்களே இப்பொழுது ஜனாதிபதித் தேர்தலைக் கருத்திற்கொண்டு மாகாணசபைத் தேர்தலை நடத்துவது பற்றிப் பேசுகின்றார்கள். தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேரம் பேசுதல், கனவான ஒப்பந்தம் செய்துகொள்ளல் எல்லாம் கடந்தகாலக் கசப்பான அனுபவங்களாக எம்முன்னால் உள்ளன. தொடர்ந்தும் தவறிழைத்துக்கொண்டிருக்க முடியாது. ஜனாதிபதித் தேர்தல்களில் நாம் விட்ட தவறுகளைச் சரிசெய்ய வேண்டிய நேரம் இது.

தமிழ்த்தேசிய அரசியலை நேர்செய்ய வேண்டிய தருணம் இது. தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழ் இனத்தின் ஒருமித்த ஒரு குறியீடு. அவர் யார்? அவரால் என்ன செய்ய முடியும்? என்று உரசிப்பார்த்துக்கொண்டு இருக்காமல் தமிழ் மக்கள் ஒரு இனமாகச் சிந்தித்து அவருக்கு வாக்களிக்க வேண்டும்-என்றார். (அ)

# இலங்கைப் பாடகர்கள் குவைத் நாட்டில் கைது!

### ஜே.வி.பிக்கு நிதி சேகரிக்க சென்றதாக தகவல்

கொழும்பு, ஓக. 06

"வெளிநாட்டில் இருக்கும் நாங்கள்" (எதெர அபி) எனக் கூறப்படும் அமைப்பின் மூலம் நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்த இசை நிகழ்ச்சி ஒன்றுக்காக குவைத் சென்ற இலங்கையைச் சேர்ந்த பிரபல பாடகர்கள் உள்ளிட்ட 26 இலங்கையர்கள் அந்நாட்டு பாதுகாப்பு துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனை கொழும்பில் இருந்து வெளியாகும் சிங்கள ஊடகம் ஒன்று இது குறித்து செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த செய்தியில், ஜே.வி.பியின் அரசியல் கூட்டணி எனப்படும் தேசிய மக்கள் சக்திக்கு நன்கொடை சேகரிக்கும் நோக்கில் "எதெர அபி" என்ற அமைப்பின் மூலம் இசை நிகழ்ச்சியொன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இசை நிகழ்சியில் கலந்துகொள்வதற்காக குவைத் சென்று அங்கு கைது செய்யப்பட்ட பிரபல பாடகர்கள் உள்ளிட்ட இலங்கையர்களில், மேலும் இருவர் இன்னும்மும் பொலிஸ் காவலில் உள்ளனர்.

கைது செய்யப்பட்ட 26 பேர்களுள் 24 பேரை விடுவிக்க குவைட் நாட்டில் உள்ள இலங்கைத் தூதரகம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

குறித்த இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த இருவரை நேற்று முன் தினம் வரை பொலிஸார் விடுவிக்கவில்லை.

இலங்கையைச் சேர்ந்த அவர்கள் இருவரும் முறையான அனுமதியின்றி அதனை ஏற்பாடு செய்துள்ள காரணத்தினால் இந்தக் கைது கடந்த 02 ஆம் திகதி இடம்பெற்றுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்த இசை நிகழ்ச்சிக்கு இலங்கையைச் சேர்ந்த சமனலீ பொன்சேகா, ஜொலீ சீயா எனப்படும் அப்புக்குட்டி சந்திரரத்ன சில்வா, இந்திரசாபா லியனகே, உபோகா நிர்மாணி, முபாரக் உள்ளிட்ட ஏராளமான கலைஞர்கள் குவைத் சென்றிருந்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்கள், இயந்திரங்களுக்கு வரிச் சலுகை கோரும் இந்தியா!

கொழும்பு, ஓக. 06

**சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் தமது உற்பத்திகளான கார்கள், வர்த்தக வாகனங்கள், இயந்திரங்கள் உட்பட பல பொருட்களுக்கு சுங்க வரிச் சலுகையை இந்தியா கோருகின்றது. அத்துடன், இது தொடர்பில் 14 சுற்று பேச்சுகள்நிறைவடைந்துள்ளனஎன்றும்தெரிவிக்கப்பட்டது.**

பேச்சுக்கு வந்த முக்கிய விடயங்களில், பொருட்கள், சேவைகள் மற்றும் வர்த்தகத்துக்கான தொழில்நுட்ப தடைகள் ஆகியவை அடங்கியிருந்தன.

இந்தநிலையில், இந்தியாவுக்கான ஆடை ஏற்றுமதிக்கான ஒதுக்கீட்டை நீக்குமாறு இலங்கை கோரியுள்ளது. தேயிலை மற்றும் சில விவசாய பொருட்களுக்கான வரி சலுகைகளையும் இலங்கை கோரியுள்ளது.

இதேவேளை, இலங்கையில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தலின் பின்னரே இரண்டு நாடுகளுக்கும் இடையிலான அடுத்தகட்ட பேச்சு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, இரண்டு நாடுகளும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை 2000ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா இலங்கைக்கு ஆடைகள், மற்றும் தேயிலைக்கு 50 சதவீத சுங்க வரியை சலுகையாக அளித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பிப்பு நேற்றுடன் நிறைவு

கொழும்பு, ஓக. 06

ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கால அவகாசம் நேற்று திங்கட்கிழமையுடன் நிறைவடைந்ததாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி நீடிக்கப்பட்டுள்ளது என்று சமூக ஊடகங்களில் பரப்பப்படும் பல்வேறு தகவல்கள் முற்றிலும் பொய்யானவை என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், www.elections.gov.lk என்ற இணையத்தளம் மூலம் தபால் வாக்கு விண்ணப்பதாரர்கள் மற்றும் ஏனைய வாக்காளர்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2024 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அதற்கான கட்டுப்பணத்தை செலுத்துவதற்கான கால அவகாசம் எதிர்வரும் 14ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவடைய உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தகைமையை பூர்த்தி செய்யாதோரும் தேர்தலில் கட்டுப்பணம் கட்டுகின்றனர்

## தேர்தல்கள் ஆணையாளர்

கொழும்பு, ஓக. 06

ஜனாதிபதித் தேர்தலுக்கு தேவையான தகைமைகளை பூர்த்தி செய்யாதவர்கள் கட்டுப்பணத்தை செலுத்தும் சூழ்நிலை தற்போது உருவாக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் மூலம் விளம்பரம் பெறும் நோக்கில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இவ்வாறு பலர் கட்டுப்பணத்தை செலுத்துவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது.

எனவே பல்வேறு காரணங்களை முன்வைத்து அநாவசியமாக தேர்தலில் களமிறங்குவதைத் தவிர்க்குமாறு தேர்தல் ஆணையாளர் நாயகம் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, நாட்டின் அரசியல் தொடர்பில் எவ்வித தொலைநோக்குப் பார்வையும் இல்லாதவர்கள் தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் தேர்தலுக்காக செலவிடப்படும் பணத்தின் அளவு அதிகரிக்கக்கூடும் என்று ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவகத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார். (ஐ)

# இன, மத வேறுபாடுகள் ஏதுமில்லாத அரசியல் கட்டமைப்பை அமைப்பேன்

## ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர

கொழும்பு, ஓக. 06

இன, மத வேறுபாடுகள் ஏதும் இல்லாத வகையில் சிறந்த வினைத்திறனான அரசியல் கட்டமைப்பை தோற்றுவிப்பேன். இலங்கையர்கள் அனைவரும் கௌரவமாக வாழும் சூழலை உருவாக்குவேன். எமது நாட்டு மக்கள் பாவம் அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காகவே அரசியலில் பிரவேசித்துள்ளேன் - இவ்வாறு சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடந்த நிகழ்வில் சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக திலித் ஜயவீர அறிவிக்கப்பட்டார்.

அங்கு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டுக்காகவே செயல்பட்டுள்ளேன். அரசியலில் ஈடுபடாத நிலையிலும் பல சந்தர்ப்பங்களில் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டுள்ளேன்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கோட்டபய ராஜபக்ஷவுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினேன். நாட்டு மக்களின் பெரும் எதிர்பார்ப்புக்கும் - முறைமை மாற்றத்துக்கும் அமைய அவரை ஜனாதிபதியாக்கினார்கள். அவரின் சகோதரர்களும், குடும்பத்தினரும் அவரை விரட்டியடிப்பார்கள். நாட்டை நெருக்கடிக்குள்ளாக்குவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

தற்போது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். தாய் நாட்டை முன்னிலைப்படுத்தி செயல்படுவேன் - என்றார். (ஐ)

# கொள்கையை மாற்றினால் நாடு மீண்டும் பாதாளத்தில்

## ஐ. எம். எவ். எச்சரித்தது என்கிறார் சியம்பலாபிட்டிய

கொழும்பு, ஓக. 06

பொருளாதார கொள்கைகளை மாற்றினால் இலங்கை மீண்டும் பாதாளத்தில் விழும் என்று சர்வதேச நாணய நிதியம் எச்சரிப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.



கேகாலை - ருவன்வெல்ல பிரதேசத்தில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "பொருளாதாரம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை மாற்றினால் நாடு மீண்டும் பாதாளத்தில் விழும் என சர்வதேச நாணய நிதியம் கருதுகின்றது.

அண்மையில் நாட்டுக்கு வருகை தந்த சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கிய பீற்றர் ப்ரூவர், நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்ததாகக் கூறினார்.

அரச வருவாயை அதிகரிப்பது, பணவீக்கத்தை கட்டுப்படுத்துவது, அந்நிய செலாவணி கையிருப்பை அதிகரிப்பது குறித்து மதிப்பீடு செய்யப்படுகின்றது. இந்நிலையில், பொருளாதாரம் தொடர்பில் சிலர் வெளியிடும் கருத்துகள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும்" - என்றார். (ஐ)

# 3 ஆயிரம் தொன்கள் இஞ்சி இறக்குமதி செய்ய யோசனை

கொழும்பு, ஓக. 06

இஞ்சி தட்டுப்பாட்டுக்கு தற்காலிக தீர்வாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு அடுத்த மூன்று மாதங்களில் 3 ஆயிரம் தொன் இஞ்சியை இறக்குமதி செய்வது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்துள்ளது.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் நிதி அமைச்சரால் வெளியிடப்பட்ட 17 ஓகஸ்ட் 2020 திகதியிட்ட சிறப்பு வர்த்தமானியின்படி இஞ்சி இறக்குமதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால், நாட்டில் இஞ்சியின் விலை 5 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. இதனால், விதை இஞ்சியைக்கூட பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே, இஞ்சியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சர்வஜன சக்தியின் வேட்பாளர் திலித்!

கொழும்பு, ஓக. 06

ஜனாதிபதி தேர்தலில் சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக தொழிலதிபர் திலித் ஜயவீர போட்டியிடுவதாக உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டார்.

சர்வஜன சக்தியின் (சர்வஜன பலய) ஜனாதிபதி வேட்பாளராக மவ்பிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

"ஒன்றிணைந்து எழுந்திடும் தேசம் - மகிழ்ச்சிமிகு தேசம்" என்ற தொனிப்பொருளின் கீழ் கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெற்றுவரும் நிகழ்வில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

# கஜமுத்துகளுடன் நால்வர் கைது!

கொழும்பு, ஓக. 06

விலை மதிப்பற்ற இரண்டு கஜமுத்துகளை வைத்திருந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாந்தோட்டை - திஸ்ஸமஹாராமை பகுதியில் கைது செய்யப்பட்ட இவர்களில் ஆசிரியை ஒருவரும் அடங்குவார். இவர் மொனராகலை - வெல்லவாயவை சேர்ந்தவராவார்.

சந்தேகநபர்கள் கஜ முத்துக்களை விற்பனை செய்வதற்காக திஸ்ஸமஹாராமை பிரதேசத்துக்கு வந்தபோது கைது செய்யப்பட்டனர்.

மேலும், சந்தேகநபர்கள் திஸ்ஸமஹாராமை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

# வீட்டின் யன்னலை திறந்து வைத்து உறங்கியவர்மீது துப்பாக்கிச்சூடு!

கொழும்பு, ஓக. 06

வீட்டின் யன்னலை திறந்து வைத்துவிட்டு உறங்கியவர் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை இரத்தினபுரி - செவனகல பகுதியில் இடம்பெற்றது. இதில், 39 வயது நபரே காயமடைந்தார்.

குடும்பஸ்தரை கொல்லும் நோக்கிலேயே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டாலும், துப்பாக்கிச் சூடு நடத்தியவர் இலக்கைத் தவறவிட்டதால் அவர் காயத்துடன் உயிர் தப்பினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நபர் எம்பிலிபிட்டி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று கூறப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "குழந்தைக்கு தாய்ப்பாலை தவிர்த்து பால்மா கொடுப்பது விஷத்துக்கு சமம்"

சாய்ந்தமருது, ஓக. 06

**குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பதை தவிர்த்து பால்மா வகைகளை கொடுப்பது பெற்ற குழந்தைக்கு விஷத்தை கொடுக்கும் செயல்பாட்டுக்கு சமம் என்று சாய்ந்தமருது பிரதேச மருத்துவமனை மருத்துவர் சனூஸ் காரியப்பர் தெரிவித்தார்.**



சர்வதேச தாய்ப்பால் தினம் சாய்ந்தமருது பிரதேச மருத்துவமனையில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

குழந்தைகளின் தேக ஆரோக்கியத்துக்குத் தேவையான தாய்ப்பாலினை கொடுப்பதனை தவிர்த்து ஏனைய பால்மா வகைகளை கொடுத்திடும் செயல்பாடு தாம் பெற்ற குழந்தைக்கு விஷத்தை கொடுத்திடும் செயல்பாட்டுக்கு சமம்.

சர்வதேச ரீதியில் தாய்ப்பால் தினம் கொண்டாடப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் தாய்ப்பாலுக்கு சர்வதேச ரீதியில் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது என்பதனை இந்த சர்வதேச தினம் சுட்டிக்காட்டுகின்றது.

ஒரு தாய் பாலூட்டல் மூலம் 42 சதவீதமான மார்பக புற்று நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும். ஒரு தாயினால் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் அந்த குழந்தைக்கு மட்டும் நன்மை கிட்டுவதில்லை தாய்க்கும் பல்வேறு வழிகளில் நன்மை கிடைக்கின்றது. பிறந்த குழந்தையொன்று தொடர்ச்சியாக அதன் ஆறு மாத காலத்துக்கும் தாய்ப்பாலை மட்டும் உட்கொள்ளும் போது ஆறு மாத காலத்துக்குப் பிற்பாடு இரண்டு வருட காலத்துக்குள் ஏனைய உணவுகளுடன் தாய்ப்பாலையும் சேர்த்து கொடுக்கும் பட்சத்தில் அந்தக் குழந்தையானது அதிகளவு நோய் எதிர்ப்பு சக்திகளைப் பெறுவதோடு புரதம் உட்பட பல்வேறு சத்துக்கள் குழந்தைக்கு கிடைக்கின்றது.

இவ்வாறு தாய்ப்பாலூட்டத்தால் வளரும் குழந்தை எதிர்காலத்தில் பூரண ஆரோக்கியமான பிரஜையாக தோற்றம் பெறும். அது மட்டுமல்லாது வயதான காலங்களில் ஏற்படும் எலும்பு முறிவு, எலும்பு தேய்வு போன்றவை ஏற்படாமல் இருப்பதற்கும் தாய்ப்பாலூட்டல் மிகவும் அவசியம்.

சந்தைகளில் காணப்படும் பால்மாவினை தவிர்த்து தாய்ப்பாலினை ஒரு குழந்தைக்கு கொடுப்பதன் மூலம் ஓர் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(எ)

# விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன

கிண்ணியா, ஓக. 06

கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

கிண்ணியா பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கே இவ்வாறு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். முகம்மது கனி தலைமையில் குறித்த பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலகத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயல அதிகாரிகள், விளையாட்டுத்துறை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு விளையாட்டு உபகரணங்களை பெற்றுக் கொண்டனர்.

(எ)





# காத்தான்குடி மீரா பாளிகா மாணவிகள் பாடசாலை சமூகத்தினரால் கௌரவிப்பு

காத்தான்குடி, ஓக. 06

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான் சதுரங்க போட்டிகள் அண்மையில் திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன. இந்தப் போட்டி நிகழ்ச்சிகளில் காத்தான்குடி மீரா பாளிகா தேசிய பாடசாலை மாணவிகள் கிழக்கு மாகாண சதுரங்க போட்டியில் கலந்து கொண்டு 20 வயது மகளிர் பிரிவில் வெற்றி பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், மாகாண மட்ட சதுரங்க போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளை தேசிய மட்ட போட்டிகளுக்கு ஊக்கப்படுத்தி கௌரவப்படுத்தும் நிகழ்வு பாடசாலை அதிபர் யூ. எல். மன்சூர் தலைமையில் நடைபெற்றது. (எ)

# நிர்வாக சபை உறுப்பினர்மீது தாக்குதல்

திருகோணமலை, ஓக. 06

திருகோணமலை, மொறவெவ - பன்குளம் நாகதம்பிரான் ஆலய நிர்வாக சபை உறுப்பினர் காளிமுத்து கடந்த 3 ஆம் திகதி மொறவெவ இராணுவ முகாமுக்கு அருகில் போத்தலால் குத்தப்பட்டு, மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் அவர் திருகோணமலை போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் .

இந்த ஆலயம் சிங்கள எல்லையோர கிராமத்தில் அமைத்துள்ளது.

தற்போது காளிமுத்து, திருகோணமலை பொது மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார். (எ)

# அல் அஷ்ரக் தேசிய பாடசாலை மாணவர்களுக்கு பதக்கங்கள்

நிந்தவூர், ஓக. 06

கல்வி அமைச்சுடன் இணைந்து, இலங்கை பாடசாலை மெய்வல்லுநர் சங்கம், ரிட்ஸ்பரி நிறுவனத்தின் அனுசரணையுடன் நாடு பூராக நடத்தி வரும் 53ஆவது சேர் ஜோன் தர்பத் கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் - 2024 போட்டி

கிழக்கு மாகாணம் மற்றும் பொலநறுவை மாவட்டத்தை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டது. இதன் ஆரம்ப சுற்றுப் போட்டிகள் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இதில் கல்முனை கல்வி வலய நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை மாணவர்கள் ஒரு தங்கப் பதக்கம், 02 வெள்ளி பதக்கங்கள் மற்றும் 06 வெண்கலப் பதக்கங்களை பெற்றனர்.

(எ)



வரலாற்றில் முதல் தடவையாக

# மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூர விழா

நிந்தவூர், ஓக. 06

வரலாற்றில் முதல் தடவையாக நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி சிறீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூர திருவிழா நாளை புதன்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவ சிறீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் முன்னிலையில் ஆலய குரு சிவ சிறீ ச. கோவர்த்தன சர்மா தலைமையில் ஆடிப்பூரத் திருவிழா நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக ஆலய பரிவான சபைத் தலைவர் கலாநிதி கே. ஜெயசிறில் தெரிவித்தார்.

இதேவேளை, நாளை மறுதினம் வியாழக்கிழமை நாக சதுர்த்தி விசேட பூஜையும் நடைபெறவுள்ளது.

அத் தருணம் கொக்கு மந்தாரை நீல காக்கணம்பூ, பால் போன்ற நைவேத்தியங்களை கொண்டு வருமாறு பக்தர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள் என்று ஆலய பரிபாலன சபையின் செயலாளர் த.சண்முகநாதன் தெரிவித்தார். (எ)

# சிங்கள மொழித்தின நிகழ்வுகள்

சம்மாந்துறை, ஓக. 06

அகில இலங்கை சிங்கள மொழித்தின போட்டியின் சம்மாந்துறை வலய போட்டிக்கான அங்குரார்ப்பண நிகழ்வுகள் நேற்றுத் திங்கட்கிழமை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

வலய சிங்கள மொழி பாட வளவாளர் ஏ. எச். நாஷிக் அகமட் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில் விருந்தினர்களாக வலயக் கல்விப் பணிமனை சார்பில் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜா மற்றும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய அதிபர் எம். [illegible] ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

# கவிதை நூல் வெளியீடு

காத்தான்குடி, ஓக. 06

எழுத்தாளரும் கவிஞருமான மௌலவி பௌஸ் ஷர்க்கி எழுதிய வேந்தர் நபி புகழ் வித்திரியாஹ் கவிதை நூல் வெளியீட்டு விழா காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்குமான ஆலிம்கள் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் மௌலவி ஷாஜஹான் ஹாபீஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹீர் மௌலானா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

(எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் பதவிவிலக வேண்டும் பங்களாதேஷில் போராட்டம்

## 15 பொலிஸார் உட்பட 100 பேர் பலி! நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு



டாக்கா, ஓக. 06

**பிரதமர் ஷேக் ஹசீனாவை பதவி விலகக் கோரி பங்களாதேஷத்தில் மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் வன்முறை வெடித்ததில் பொலிஸார் உட்பட 100 பேர் உயிரிழந்தனர்.**

இதேவேளை, பங்களாதேஷ் பயணத்தை தவிர்க்குமாறு இந்தியர்களுக்கு வெளிவிவகார அமைச்சு பயண எச்சரிக்கை விடுத்துள்ளது.

பங்களாதேஷத்தில் நிலவும் அதிர்ச்சியூட்டும் வன்முறை உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்று ஐ.நாவின் மனித உரிமைகள் அமைப்பின் தலைவர் வோல்கர் டர்க் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு, அரசாங்கம் அமைதிப் போராட்டங்களை ஆயுதப்படைகளைக் கொண்டு ஒடுக்கக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 1971ஆம் ஆண்டு பங்களாதேஷத்தில் நடந்த விடுதலைப் போராட்டத்தில் உயிரிழந்த படைவீரர்களின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வாய்ப்புகளில் 30 சதவீதம் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து கடந்த ஜூலை மாதம் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நடத்திய தாக்குதலில் 200இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், பொலிஸை ஏவி போராட்டக்காரர்களைக் கொன்றதற்கு நீதி கேட்டு பல்லாயிரக்கணக்கான மாணவர்கள், அந்த நாட்டின் தலைநகர் டாக்காவின் மத்திய சதுக்கத்தில் குவியத் தொடங்கினர்.

மேலும், பல்வேறு நகரங்களிலும் போராட்டம் வெடித்தது. பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ள போராட்டக்காரர்கள், இனி மக்கள் யாரும் அரசுக்கு வரி செலுத்தக் கூடாது என்றும், அரசு ஊழியர்கள் மற்றும் மற்றும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் மேற்கொள்ள வேண்டும் என்றும் நாடு தழுவிய ஒத்துழையாமை போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தனர்.

அரச கட்டடங்கள் மற்றும் வாகனங்களுக்கு போராட்டக்காரர்கள் தீவைத்தனர். போராட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் கைக் குண்டுகளை வீசினர். போராட்டக்காரர்களும் பொலிஸார் மீது பதில் தாக்குதல் நடத்தினர். இதில் 14 பொலிஸார் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், முப்படைத் தளபதிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள் உட்பட பல்வேறு பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்து ஆலோசனை நடத்திய பிரதமர் ஷேக் ஹசீனா "அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் மாணவர்கள் இல்லை. அவர்கள் தீவிரவாதிகள். நாட்டை சீர்குலைக்கும் நோக்கில் இந்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். மக்கள் இந்த நாச வேலையை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார். இதேவேளை, நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

(எ)

# ஜனநாயக கட்சியின் அதிகாரபூர்வ வேட்பாளரானார் கமலா ஹாரிஸ்

வாஷிங்டன், ஓக. 06

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சியின் வேட்பாளராக இருப்பதில் நான் பெருமைப்படுகிறேன். அடுத்த வாரம் வேட்புமனுவை ஏற்றுக் கொள்வேன் என கமலா ஹாரிஸ் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

ஜனநாயக கட்சியின் அதிகாரபூர்வ வேட்பாளராக அறிவிக்கப்படத் தேவையான வாக்குகளைக் கமலா ஹாரிஸ் பெற்றுள்ளார். சுமார் 4,000 ஜனநாயக கட்சி பிரதிநிதிகள் பங்கேற்ற உட்கட்சி தேர்தல் நடைபெற்றது. இதில் கமலா ஹாரிஸ் மட்டுமே வேட்பாளராக இருந்த நிலையில், அவர் ஜனாதிபதி வேட்பாளராகத் தேவையான வாக்குகளைப் பெற்றார். ஓகஸ்ட் 19 ஆம் திகதி சிகாகோவில் ஜனநாயக கட்சி மாநாடு நடைபெறும் நிலையில், அதில் கமலா ஹாரிஸ் அதிகாரபூர்வ வேட்பாளராக அறிவிக்கப்படவுள்ளார்.

இந்த நிலையில், இது குறித்து தனது எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில், "அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சியின் வேட்பாளராக இருப்பதில் நான் பெருமைப்படுகிறேன். அடுத்த வாரம் வேட்புமனுவை அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்வேன். இந்த பிரசாரத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும்"எனத் தெரிவித்தார்.

(எ)



# ரஷ்யா திரும்பிய உளவாளி தம்பதியை வரவேற்ற புடின்

மொஸ்கோ, ஓக. 06

ரஷ்ய உளவாளி தம்பதி ஆர்டெம் டல்ட்சேவ், அவருடைய மனைவி அன்னா டல்ட்சேவ், குழந்தைகளை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், விமான நிலையத்திலிருந்து அழைத்துச் சென்றார்.

அமெரிக்கா, ரஷ்யா, பெலாரஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் தங்கள் நாட்டு கைதிகளை பரஸ்பரம் பரிமாறிக் கொள்வது தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டது. இதன் ஒரு பகுதியாகவே ரஷ்ய உளவாளி விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஈரான் - இஸ்ரேல் போர் பதற்றம்

# அமெரிக்க இராணுவ ஜெனரல் மத்திய கிழக்குக்கு பயணம்

தெஹ்ரான், ஓக. 06

ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியே படுகொலைக்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளதால் அமெரிக்க இராணுவ ஜெனரல் மைக்கேல் குரில்லா மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.



இந்த பயணம் ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒன்று. இஸ்ரேலுக்கு ஆதரவு திரட்டும் முயற்சியின் பகுதியாக அமெரிக்க இராணுவ ஜெனரல் மைக்கேல் குரில்லாவின் இந்த பயணம் திட்டமிடப்பட்டுள்ளது. எனினும், இந்த பயணத்துக்கு முன்னதாக மத்திய கிழக்கில் போர் நிலவும் சூழல் ஏற்பட்டுள்ளது.

(எ)

# செப். 4இல் கமலா ஹாரிஸுடன் விவாதம் நடத்த ட்ரம்ப் சம்மதம்

வாஷிங்டன், ஓக. 05

கமலா ஹாரிஸுடன் நேருக்கு நேர் விவாதம் நடத்த டொனால்ட் ட்ரம்ப் சம்மதம் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி நடக்கவுள்ளது. குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் வேட்பாளராகப் போட்டியிடுகிறார். ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ)

# மத்திய கிழக்கில் போர் பதற்றம் எந்த நேரத்திலும் தாக்க வாய்ப்பு

டெல் அவிவ், ஓக. 06

லெபனானில் இருந்து ஹிஸ்புல்லா அமைப்பினர் வீசிய ஏவுகணைகளை இஸ்ரேலின் 'அயர்ன் டோம்' பாதுகாப்பு கவச ஏவுகணைகள் நடுவானில் இடைமறித்து அழித்தன.



இதனால், இஸ்ரேல் - ஈரான் இடையே போர் பதற்றம் அதிகரித்து வருகிறது. இன்று அல்லது அடுத்த சில நாட்களில் இஸ்ரேல் மீது ஈரான் இராணுவம் தாக்குதல் நடத்தக்கூடும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இஸ்ரேலின் டெல் அவிவ், ஹைபா நகரங்களில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த ஏப்ரல் 13ஆம் திகதி இஸ்ரேலை குறிவைத்து ஈரான் இராணுவம் 300 ஏவுகணைகளை வீசியது. இவை நடுவானில் அழிக்கப்பட்டன. ஈரானின் ட்ரோன்களும் சுட்டு வீழ்த்தப்பட்டன. இதேபோல இந்த முறையும் ஈரான் இராணுவத்துக்கு பதிலடி கொடுக்கப்படும்- இவ்வாறு இஸ்ரேல் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்கா, ஐரோப்பா, ஆசிய நாடுகளில் உள்ள யூத வழிபாட்டு தலங்கள் மீது தாக்குதல் நடத்த தீவிரவாத குழுக்கள் திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் அங்கு [illegible] பலப்படுத்தப்பட்டுள்ளது. பாரிஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்றுள்ள இஸ்ரேலிய வீரர்களுக்கான பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் - ஈரான் இடையே போர் பதற்றம் எழும்போது ஜோர்தான் நாடு சமரச முயற்சியில் ஈடுபடுவது வழக்கம். தற்போது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் வேண்டுகோளை ஏற்று ஜோர்தான் வெளிவிவகார அமைச்சர் அயுமான் சபாடி ஈரான் தலைநகர் தெஹ்ரான் சென்றார். ஈரான் ஜனாதிபதி மசூத் பெஸ்கியன் உள்ளிட்ட தலைவர்களுடன் அவர் பேசியதாக கூறப்படுகிறது. இந்த சமரச முயற்சி வெற்றி பெறுமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இந்த நிலையில், மத்திய இஸ்ரேல் பகுதிகளில் ஜி. பி. எஸ். சேவை முடக்கப்பட்டது. கடந்த ஏப்ரல் 13ஆம் திகதி இஸ்ரேல் மீது ஈரான் இராணுவம் தாக்குதல் நடத்தியபோதும் இஸ்ரேல் முழுவதும் ஜி. பி. எஸ். சேவை முடக்கப்பட்டது. இது போருக்கான அறிகுறியாக கருதப்படுகிறது.

இதுகுறித்து பாதுகாப்புத் துறை நிபுணர்கள் கூறும்போது, "ஏவுகணைகள், ட்ரோன்கள் ஜி. பி. எஸ். சேவை மூலமே இலக்குகளை துல்லியமாக கண்டறிந்து தாக்குகின்றன. ஜி. பி. எஸ். சேவையை முடக்கும்போது ஏவுகணை, ட்ரோன்களால் இலக்கை கண்டறிவது கடினம். இந்த போர் உத்தியை இஸ்ரேல் இராணுவம் பயன்படுத்துகிறது. இஸ்ரேலின் பெரும்பாலான பகுதிகளில் தற்போது ஜி. பி. எஸ். சேவை முடக்கப்பட்டுள்ளது. இது போருக்கான அறிகுறியாகவே தெரிகிறது" என்று கூறியுள்ளனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை?

கொழும்பு, ஒக. 06

**ஆளும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற பெரும்பான்மையை சவாலுக்கு உட்படுத்தும் வகையில், நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவருவது தொடர்பில் எதிர்க்கட்சிகளிடையே பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பாராளுமன்ற அமர்வு நாளை ஆரம்பமாகும் நிலையில் இந்தப் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிய வருகின்றது.**

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளிவந்துள்ள நிலையில், நாட்டின் அரசியல் களம் சூடுபிடித்துள்ளது. இதனை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்லும் வகையில், பாராளுமன்றத்தில் ஆளும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவர எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஆளும் கட்சிக்கு 113 என்ற பெரும்பான்மை இல்லை என்ற காரணத்தை அடிப்படையாகக் கொண்டே பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது. ஆளும் கூட்டணி கட்சிகளின் பிரதான கட்சியான சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர். ஆனால், ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று பொதுஜன பெரமுன உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு 92 பேர் ஆதரவளிக்கின்றனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. இந்த நிலையிலேயே அரசாங்கத்துக்கு 113 என்ற பெரும்பான்மை இல்லை என்று எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன. அத்துடன், நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவரவும் தீர்மானித்துள்ளன.

(ஐ)

# அரசாங்கத்தின் ஆயுட்காலம் இன்னும் 46 நாட்களில் முடியும்!

## ஜீ. எல். பீரிஸ் எச்சரிக்கை



கொழும்பு, ஒக. 06

தனிப்பெரும்பான்மையை இந்த அரசாங்கம் இழந்துள்ளது. இன்னமும் 46 நாட்களில் இந்த அரசாங்கத்தின் ஆயுட்காலம் முடிவடையும் - என்று பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

"பாராளுமன்றத்தில், இரண்டு வருடங்களுக்கு முன்னர் 134 வாக்குகளால் தெரிவான ஜனாதிபதிக்கு 92 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவே உள்ளது. தனிப்பெரும்பான்மையைக்கூட அரசாங்கம் இழந்துள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் ஆயுட்காலம் இன்னும் 46 நாட்களில் முடிவடையும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் வெற்றியை உறுதிப்படுத்தும் கொள்கை அடித்தளத்துடன் அண்மையில் உருவாகியுள்ள மாபெரும் கூட்டணி வரும் 8ஆம் திகதி - நாளை மறுதினம் வியாழக்கிழமை உருவாக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

நீதித்துறை மீது முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போதைய அரசாங்கம் செயல்பட்டு வருகின்றது. தற்போதைய ஜனாதிபதி நீதித்துறையை செயலிழக்க செய்கிறார் என்று நீதிபதிகள் பகிரங்கமாக விமர்சித்து வருகின்றனர்" - என்றார்.

(ஐ)

# ஜெயவர்த்தனவிடம் அரசியல் கற்றுக்கொண்டவர்கள் நாம்!

## திருமலையில் சொன்னார் ரணில்



கொழும்பு, ஒக. 06

நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் பாடுபட வேண்டும். அதை நாம் ஜே. ஆர். ஜெயவர்தனவின் அரசியலில் இருந்து கற்றுக்கொண்டோம். 30 வருடங்கள் செல்லும் என்று கூறப்பட்ட மகாவலித் திட்டம் 10 வருடங்களில் நிறைவு செய்யப்பட்டது - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

திருகோணமலை இந்து கலாசார நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் எங்களுக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் பேச்சு நடத்தி உடன்பாட்டை காண முடிந்தது. 2042 வரை எங்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் விதிமுறைகளை மீறினால், அந்த சலுகைகளை இழக்க நேரிடும். ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வோம் என்று எதிர்க்கட்சிகள் இப்போது பேசுகின்றன. அவர்கள் சொல்வதைச் செய்தால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும். எனவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற வேண்டும்.

மேலும் இந்த நாட்டை இளைஞர்களுக்காக கட்டியெழுப்ப வேண்டும். இறக்குமதிக்கு செலுத்துவதற்கு அந்நிய செலாவணி போதுமானதாக இல்லாதிருப்பது தான் எமக்குள்ள பிரதான பிரச்னையாகும். அதனால் கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 10 ஆண்டுகளுக்கு இந்த நிலை தொடர்ந்தால், 15 ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும். எனவே, பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். ஏற்றுமதி பொருளாதாரத்தின் மூலமே நாட்டை முன்னேற்ற முடியும். அடுத்த ஐந்தாண்டுகளில் புதிய திட்டங்களைத் தொடங்கி இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் பாடுபட வேண்டும். அதை நாம் ஜே. ஆர். ஜெயவர்தனவின் அரசியலில் இருந்து கற்றுக்கொண்டோம். 30 வருடங்கள் செல்லும் என்று கூறப்பட்ட மகாவலித் திட்டம் 10 வருடங்களில் நிறைவு செய்யப்பட்டது. பின்னர் இரண்டு வர்த்தக வலயங்கள் உருவாக்கப்பட்டன. நாம் அனைவரும் ஒன்று சேர்ந்தால் முன்பை விட பல பணிகளை செய்ய முடியும் - என்றார்.

(ஐ)

# வி. எவ். எஸ். நிறுவனத்தால் 120 கோடி டொலர்கள் இழப்பு!

கொழும்பு, ஒக. 06

வி. எவ். எஸ் நிறுவனத்துக்கு விலைமனு கோரல் இல்லாமல், இணைய வீஸா சேவை தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள முறைமையை மாற்றி, வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து சேவையைப் பெற மேற்கொண்ட நடவடிக்கையால் 120 கோடி டொலரை இழந்துள்ளோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வி. எவ். எஸ். கொடுக்கல் வாங்கல் மூலம் தமது சொந்த நலனையே இந்த திருடர்கள் முன்னெடுத்தனர். ரவூப் ஹக்கீம், சுமந்திரன், சம்பிக்க ரணவக்க, அசோக் அபேசிங்க, ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய தலைமையிலான ஏனைய சட்டத்தரணிகளின் வலுவான வாதங்களை ஏற்றுக்கொண்டு வி. எவ். எஸ். கொடுக்கல் வாங்கல் மோசடிக்கு உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

ராஜபக்ஷக்களுடன்கைகோத்து அரசியல் செய்தவர்கள் தற்போது ஒருவர் பின் ஒருவராக ஜனாதிபதியுடன் கைகோத்து வருகின்றனர். மக்களே இவர்களின் முகங்களை நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். அடைக்கலம் தேடியே ரணிலோடு இணைகின்றனர். இன்று ராஜபக்ஷ குலத்தை முத்தமிட்டு நாட்டையே நாசமாக்கிய தரப்பினர் ஜனாதிபதியோடு கைகோத்து தமக்கு பாதுகாப்பான இடத்தை தேடி வருகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியிலும் ஐக்கிய மக்கள் கூட்டணியிலும் இந்த திருடர்களுக்கு இடமில்லை.

நாட்டில் ஊட்டச்சத்து குறைபாடு காணப்பட்டு வருகிறது. 23 இலட்சம் பிள்ளைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என யுனிசெவ் நிறுவனமே தெரிவித்துள்ளது. இது பாரதூரமான பிரச்னையாகும். பாடசாலை மாணவர்களின் போசாக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால், ஆட்சியாளர்களிடம் இதற்கு தீர்வுகள் இல்லை - என்று நேற்று முன்தினம் நுவரெலியாவில் நடந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

(ஐ)

# 40 வீதமான பிள்ளைகள் பாடசாலை செல்லமுடியாத நிலையிலுள்ளனர்!

## இலங்கை ஆசிரியர் சேவை சங்கம்

கொழும்பு, ஒக. 06

இரண்டு மூன்று பிள்ளைகள் இருக்கின்ற குடும்பங்களில் எந்தப் பிள்ளைக்கு கல்வி புகட்டுவது எனும் கேள்வி எழுகின்றது. பாடசாலை செல்லவேண்டிய வயதில் உள்ள பிள்ளைகளில் 40 வீதத்தினர் பாடசாலை செல்ல முடியாத நிலையில் இருக்கிறார்கள். பிறரிடம் உடைகளை வாங்கி அணிகின்ற 20வீதத்தினர் இருக்கிறார்கள் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் விஷாகா அபேரத்ன தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய ஆசிரியர் மாநாட்டில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வகுப்பறையில் வேதனைகளை வெளிப்படுத்திக் கொள்ளக்கூட முடியாமல் இருக்கின்ற பிள்ளைகளை நாங்கள் காண்கிறோம். சமூகவலைத்தளங்களில் இந்த பிள்ளைகளின் உணவு வேளைகள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தினார்கள்.

கொழும்பில் மாத்திரமல்ல தொலைதூரப் பிரதேசங்களில் கூட இந்த துன்பப்படுகின்ற ஆசிரியைகள் தமது பிள்ளைக்கு தாயாக அமைவதைவிட பாடசாலையில் அந்த பிள்ளைகளுக்கு தாயாக அமைகிறார்கள். எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை கட்டியழுப்ப வேண்டுமென்ற ஏகோபித்த எதிர்பார்ப்பு இருக்கின்றது. புதிய மறுமலர்ச்சிக்காக செயல்படுவோம் - என்றார்.

(ஐ)

# புனித அன்னம்மாள் தேவாலய திருவிழா சிறப்பாக நடந்தது!

கொழும்பு, ஒக. 06

புத்தளம் - சிலாபம் மறை மாவட்டத்தில் புகழ்பெற்ற கத்தோலிக்க தலமான கற்பிட்டி தலவில புனித அன்னம்மாள் தேவாலயத்தின் 263ஆவது வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது.

திருவிழாவின் கூட்டுத்திருப்பலி சிலாபம் மறைமாவட்ட ஆயர் தொன் விமலசிறி ஜயசூரிய ஆண்டகை மற்றும் இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் வைமன் குருஸ் ஆண்டகை ஆகியோரின் தலைமையில் ஒப்புகொடுக்கப்பட்டது.

திருப்பலியின் பின்னர் புனித அன்னம்மாளின் திருச் சொரூப பவனி நடைபெற்றதுடன் திருச்சொரூப ஆசீர்வாதமும் நடைபெற்றது. தலவில புனித அன்னம்மாள் ஆலய திருவிழாவில் பல்லாயி ரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுப்பணம்...

பத்தரமுல்லை சீலரதன தேரர் அக்மீமன தயாரதன தேரர் மற்றும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆகியோர் கட்டுப்பணத்தை வைப்பிலிட்டுள்ளனர்.

இதேவேளை 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரை 15 வேட்பாளர்கள் தமது கட்டுப்பணத்தை வைப்பிலிட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

## வேறு நிலையங்க...

எடுக்கப்படவில்லையென அந்த ஆணைக்குழு அறிக்கையொன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது.

எந்தவொரு வாக்காளரும், தங்களுக்குரிய வாக்காளர் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்துக்கு மாறாக வேறொரு நிலையத்தில் வாக்களிக்க முடியாது எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

## பற்றைக்குள்ளிருந்து 3 வாள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 06

குற்றச்செயல்களை மேற்கொள்ளும் நோக்கில் பற்றைக்குள் மறைத்து வைத்திருந்த 3 வாள்கள், காலணிகள், முகமூடிகள் மற்றும் மேல் அங்கிகள் என்பன நேற்று திங்கட்கிழமை பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருபவை வருமாறு,

ஏழாலை மேற்கு , ஏழாலை, புளியங்கிணற்றடி என்ற இடத்தில் உள்ள பற்றைக்குள் இருந்தே வாள்களை பொலிஸார் மீட்டனர்.

சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது குறித்து மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## தமிழ் பொது...

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் விதமாக தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், தமிழ் சிவில் அமைப்புகளின் ஒன்றிணைவான தமிழ் மக்கள் பொதுச் சபை என்பன இணைந்து முயற்சி எடுத்து வருகின்றன.

இந்த நிலையில், தமிழ்ப் பொது வேட்பாளரை தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்று யாழ்ப்பாணம் நகரிலுள்ள விடுதி ஒன்றில் மதியம் ஒரு மணி தொடக்கம் 5.45 மணி வரை நடைபெற்றது.

கூட்டத்தின் முடிவில் தமிழ் பொது வேட்பாளரை தெரிவு செய்வதற்கான குழுவின் உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவருமான என். சிறீகாந்தா ஊடகங்களுக்கு தகவல் வெளியிடுகையில்,

இந்தக் கூட்டத்தில் தமிழ்ப் பொது வேட்பாளராக போட்டியிட விதந்துரைக்கப்பட்டவர்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. முடிவில் தமிழ்ப் பொது வேட்பாளராக முன்னிறுத்த இருவரின் பெயர்களை பரிசீலனைக்கு உட்படுத்தியுள்ளோம். தமிழ் பொது வேட்பாளர் யார் என்பதை தமிழ் மக்களுக்கு (நாளை) புதன்கிழமை தவறினால் (நாளை மறுதினம்) வியாழக்கிழமை அறிவிப்போம். அதுவரை உள்ளக ரீதியான கலந்துரையாடல் நடைபெறும்.

இதேநேரம், இந்த சந்திப்பில் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளர் சார்பில் வெளியிடப்படும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படும் விடயங்கள் சம்பந்தமாகவும் பேசப்பட்டன - என்று கூறினார்.

நேற்றைய இந்த சந்திப்பில் ரெலோ கட்சி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் ந. சிறீகாந்தா, ஜனநாயகப் போராளிகளின் தலைவர் வேந்தன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், ரெலோ கட்சியின் பேச்சாளர் கு. சுரேந்திரன், தமிழ் மக்கள் பொதுச் சபை சார்பில் யதீந்திரா, நிலாந்தன், அ. யோதிலிங்கம், இ. செல்வின் ஆகியோரும் பங்கேற்றனர்.

## திராய்க்கேணி...

இந்தச் சம்பவத்தில் 13 வயது சிறுமி ஒருவர் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டார். இந்த வன்முறையின் போது தமிழ் மக்களுக்கு சொந்தமான வீடுகள் எரியூட்டப்பட்டன. திராய்க்கேணியிலிருந்து இடம்பெயர்ந்த காரைதீவு அகதிமுகாமில் தஞ்சமடைந்த பொதுமக்கள் மீண்டும் 4 ஆண்டுகள் கழித்தே சொந்த இடம் திரும்பியிருந்தனர்.

இந்தப் படுகொலை குறித்து இன்று வரை நேர்மையான விசாரணைகள் நடைபெறவில்லை என்பதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியும் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முன்னாள் படை...

அறிக்கை இந்த விடயத்தை வெளியிட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவரான அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே அநுரகுமார இதனைத் தெரிவித்தார்.

மேலும், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் புத்துயிர்ப்பு மற்றும் ஓய்வுபெற்ற படையினரின் அமைப்பு ஆகியவை மூலமாக தேசிய மக்கள் முன்னணியின் வெற்றியை தடுக்க முடியாது என்று புலனாய்வுத் துறை குறிப்பிட்டதாகவும் கூறினார். (ஐ)

## பொதுஜன பெரமுன...

முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதேபோல் மைத்திரிபால சிறிசேனவுக்கு கட்சி என்ற ஒன்று இல்லாமல் உள்ளது.

பொதுஜன பெரமுனவில் இருந்து வெளியேறி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்துள்ள பலர் விரைவில் வீடு செல்ல நேரிடும். ஏனெனில் பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் ஒரு போதும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

பொதுஜன பெரமுன கட்சி சார்பாக பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் பலர் மகிந்த ராஜபக்ஷவின் அடையாளத்தினாலேயே பாராளுமன்றம் சென்றனர் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் மறந்துவிடக்கூடாது.

பொதுஜன பெரமுனவில் இருந்து வெளியேறி எவருக்கும் தனிப்பட்ட விருப்பு வாக்குகள் கிடைக்கப்பெறாது - என்றார். (அ)

## ஓக. 14 முதல்...

ஒப்பிடும்போது முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்கள் சற்று கனமான மழையைப் பெற வாய்ப்புள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நெல் மற்றும் சிறுதானிய பயிர்களை அறுவடை செய்பவர்கள் மழை தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம். மேலும், வெப்ப சலன செயல்பாடு காரணமாக இந்த மழை கிடைக்கும் என்பதனால் இடி, மின்னல் தொடர்பில் மிகவும் அவதானமாக இருப்பது அவசியம் - என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், வளிமண்டலவியல் திணைக்களம், "வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் பொலநறுவை மற்றும் பதுளை மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் அதிக, இடி - மின்னல் தாக்கத்துடன் மழை பெய்யக்கூடிய சாத்தியம் அதிகம் - என்று குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# 95 பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விவரங்கள் வெளியாகின!

கொழும்பு, ஓக. 06

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு, 95 பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விவரங்களை பொதுமக்களின் பார்வைக்காக வெளியிட்டுள்ளது.

ஆவணங்கள் இப்போது ஆணையகத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கை, பொது அதிகாரிகளிடையே வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் அதிகரிப்பதற்கான ஆணையகாத்தின் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாகும்.

இந்தநிலையில், ஏனைய அரசியல்வாதிகளின் சொத்துப் பிரகடனங்கள் பெறப்படும் வரிசையை பின்பற்றி உரிய காலத்தில் பகிரங்கப்படுத்தப்படும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# ஐ.தே.கவையும் சு.கவையும் மீள கட்டியெழுப்பமுடியாது

## திடமாக கூறுகிறார் ரொஷான் ரணசிங்க

கொழும்பு, ஓக. 06

ஐக்கிய தேசியக் கட்சியையும் சுதந்திரக் கட்சியையும் மீண்டும் கட்டியெழுப்ப முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

பொலனறுவையில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் ஊழல் மோசடிகளுக்கு இனி இடமில்லை. புதிய வேலைத்திட்டத்துடன் இந்த நாடு கட்டியெழுப்பப்பட வேண்டும்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக உலகம் அறிந்த ஒருவரை முன்னிறுத்த வேண்டும். பொதுஜன பெரமுனவைக் கட்டியெழுப்ப கடுமையாக உழைத்தவர்கள் உள்ளனர். அத்தகைய ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பது நல்லது.

நான் அமைச்சுப் பதவிக்காக முன்னும் பின்னுமாக குதிப்பவர் அல்லன். நாட்டின் எந்த மாவட்டத்தில் இருந்தும் சுதந்திரமாக நின்று பாராளுமன்றம் செல்ல முடியும்-என்றார். (அ)



## 100 இற்கு ...

ஆதரவு வழங்குவதற்கு நாம் கடந்த 2 வருடங்களுக்கு முன்னதாகவே தீர்மானம் மேற்கொண்டோம். ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கியது புதிய விடயமல்ல.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் சுயாதீன வேட்பாளராக முன்னிலையாவதாக ஜனாதிபதி அறிவித்தார். தற்போதைய நிலையில் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலில் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் பொதுஜன பெரமுனவின் பதவி நிலைகளில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுஜன பெரமுன கட்சி இன்று பல வகைகளிலும் பிளவுபட்டுள்ளது.

கட்சியில் மேற்கொள்ளப்படும் ஒரு சில தீர்மானங்களினாலேயே இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு தேர்தலின்போது பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி 149 பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர்.

ஆனால் தற்போது 24 இற்கும் குறைவான பாராளுமன்ற உறுப்பினர்களே கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளனர். எதிர்வரும் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு காணப்படுகின்றது.

பொதுஜன பெரமுனவில் இருந்து கடந்த வாரம் 92 பேர் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதற்கு தீர்மானித்திருந்த நிலையில் இன்று நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர். அமைச்சுப் பதவி வகிப்பவர்களும் இதில் உள்ளடங்கியுள்ளனர் - என்றார். (அ)

# நிகழ்நிலை காப்பு சட்டம் இரத்து செய்ய வேண்டும்!

## 41 தொழிற்சங்கங்கள் கோரிக்கை

கொழும்பு, ஓக. 06

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை உடனடியாக இரத்து செய்யுமாறு 41 முன்னணி தொழிற்சங்கங்கள் கோரியுள்ளன.

இது தொடர்பில் குறித்த தொழிற்சங்கங்கள் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளன.

இந்தச் சட்டம் நாட்டின் பிரஜைகளின் கருத்து சுதந்திரத்தை ஒடுக்கும் ஒரு சட்டம் எனவும் நிகழ்நிலை சுதந்திரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அர்ச்சுனாவின்...

மகப்பேற்று மருத்துவரின் அறைக்குள் அனுமதியின்றி நுழைந்ததுடன், அங்கிருந்த மருத்துவருடன் முரண்பட்டமை - ஒளிப்படம் எடுத்தமை போன்ற குற்றச்சாட்டுகளுக்காக மருத்துவர் அர்ச்சுனா கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

அவரை நாளை புதன்கிழமை - 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த நிலையில், விளக்கமறியலில் வைக்கப்பட்ட மருத்துவர் அர்ச்சுனா பிணை கோரி தனது சட்டத்தரணிகள் ஊடாக நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்தார்.

இந்த நகர்த்தல் பத்திரம்மீதான விசாரணை நேற்று திங்கட்கிழமை எடுக்கப்பட்டது. இதன்போது, மருத்துவர் அர்ச்சுனாவின் பிணையை நிராகரித்த நீதிவான், அவரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அரசுக்குத் தனிப்பெரும்பான்மை அதனால் ஆட்சிக்கு ஆபத்தில்லை!

## அமைச்சர் பிரசன்ன நம்பிக்கை



கொழும்பு, ஓக. 06

**அரசாங்கத்துக்கு தனிப்பெரும்பான்மை இருப்பதால், அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு அரசாங்கத்தை நடத்துவதில் சிக்கல் இருக்காது என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

மேலும், கட்சி சரியான முடிவை எடுக்காவிட்டால், பொதுஜன பெரமுனவில் இரண்டு அல்லது மூன்று உறுப்பினர்களே எஞ்சுவார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

திவுலபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது-

**கேள்வி** - கம்பஹா மாவட்டத் தலைமைப் பதவியிலிருந்து நீங்கள் நீக்கப்பட்டுள்ளீர்களா?

**பதில்** - எனக்கு தெரிந்த வரை மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கையில் இருந்து நீக்கப்பட்டேன். அது நியாயமானது தான். ஏனெனில் மொட்டு வேட்பாளரை ஆதரிக்கமாட்டோம். நாட்டைப் பற்றி யோசித்து முடிவு எடுத்தேன். நான் என் முடிவில் நிற்கிறேன்.

**கேள்வி**- மொட்டுக்கு இப்போது என்ன நடக்கும்?

**பதில்**- அது ஒரு பேரழிவாக இருக்கும். இது அவர்களின் சொந்த வேட்பாளர்களில் ஒருவர் போட்ட ஒப்பந்தம் ஆகும். கட்சியின் வேட்பாளர் வெற்றி பெற முடியாது. சஜித்துக்கும் ரணிலுக்கும் இடையில்தான் போட்டி. எங்களுக்கு ஒரு ஒப்பந்தமும் இல்லை. பணத்தால் கட்சியை விற்க முடியாது. இது மக்களால் உருவாக்கப்பட்ட கட்சி.

**கேள்வி** - பதவிகள் இல்லாமல் நீங்களும் மற்றவர்களும் தேர்தலுக்கு செல்ல முடியுமா?

**பதில்** - கட்சி வழங்கும் பதவிகள் அரசியல் சபையைப் போன்றது. அதில் இருப்பவர்கள் வீட்டில் வேலை செய்பவர்கள், தங்கள் சொந்தப் பாதுகாப்புடன் இருப்பார்கள். ஆனால் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்றிய தலைவரை நாட்டு மக்கள் கேட்கிறார்கள். இன்று வரை இந்த கட்சியின் மாவட்ட தலைவராக நான் இல்லை. எனக்கு அத்தகைய நியமனம் வழங்கப்படவில்லை. அந்த நியமனத்தை மக்கள் தான் கொடுத்தார்கள். பலாத்காரமாக கொடுத்த தலைமையை எந்த அளவிற்கு ஏற்பார்கள் என்று பார்ப்போம்.

**கேள்வி** - கட்சி இல்லாத இன்றைய நிலை உங்களுக்கு சவாலாக இல்லையா?

**பதில்** - இல்லை. ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியின் பின்னர் மொட்டு அல்லது வேறொரு கட்சியுடன் கூட்டணி அமையும். தற்போது இந்த நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் ஏற்பட்டுள்ளது. அனைத்து அரசியல் கட்சிகள், தலைவர்கள் மற்றும் அனைத்து இனங்களும் எங்கள் மேடையில் ஒன்றுபட்டுள்ளன, மக்கள் எதிர்பார்க்கும் அமைப்பு மாற்றம் எங்கள் பக்கம் உள்ளது.

**கேள்வி** - கட்சி எடுத்த முடிவின் பின்னணியில் யார் இருக்கிறார்கள்? நாமல் ராஜபக்ஷவா?

**பதில்** - பசில் ராஜபக்ஷ இந்தக் கட்சியை ஒன்றிணைத்தார். பதவிகளை கொடுக்கும்போது அனுபவமுள்ள ஒருவருக்கு கொடுக்க வேண்டும். 2022 இல் அனுபவமில்லாதவர்கள் நாட்டைப் பொறுப்பேற்ற அதே நிலைதான் இன்று கட்சிக்கும் நடக்கிறது.

**கேள்வி** - மொட்டு பிளவடைந்தது அரசாங்கத்துக்கு அச்சுறுத்தல் இல்லையா?

**பதில்** - ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் என்ற வகையில் நான் கடந்த இரண்டரை வருடங்களில் அந்த சவாலை எதிர்கொண்டேன். எங்களுக்கு 113 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேவை. எஞ்சிய இரண்டு அல்லது மூன்று மாதங்களில் நாம் இந்தப் பயணத்தை மேற்கொள்ள முடியும். எங்களுக்கு தனிப் பெரும்பான்மை உள்ளது.

**கேள்வி** - இறுதியில் மொட்டில் எத்தனை பேர் எஞ்சியிருப்பார்கள்

**பதில்** - சரியான தீர்மானம் எடுத்தால் நாம் மொட்டுவுடன் இருப்போம். தவறான முடிவு எடுத்தால் இரண்டு மூன்று பேர் மிஞ்சுவார்கள்-என்றார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலின்போது அச்சிடும் செலவு அதிகரிக்கும்

கொழும்பு, ஓக. 06

கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும்போது இம்முறை ஜனாதிபதித் தேர்தலின் அச்சிடும் செலவுகள் மும்மடங்கினால் அதிகரிக்கக்கூடும் என அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

மூலப்பொருட்களின் விலைகள் உயர்வடைந்தமை மற்றும் அச்சிடப்படவேண்டிய வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளமை ஆகியன இதற்கான காரணமாகும் என அரச அச்சகர் கங்கா கல்பனீ லியனகே குறிப்பிட்டார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும்போது வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதுடன் தொடர்புடைய ஏனைய செலவுகளும் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

அதற்கமைய, இம்முறை ஜனாதிபதித் தேர்தலின் அச்சிடும் நடவடிக்கைகளுக்காக 800 மில்லியன் ரூபா செலவாகுமென எதிர்பார்க்கப்படுவதாக அரச அச்சகர் தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்காக அச்சிடப்பட்ட வாக்குச்சீட்டு 27 அங்குலம் நீளம் கொண்டதாக காணப்பட்டது.

இம்முறை வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமாயின், வாக்குச்சீட்டின் நீளமும் அதிகரிப்பதுடன் செலவுகளிலும் அதிகரிப்பை ஏற்படுத்துமென அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# தேர்தல் முறைப்பாடுகளை இனிமேல் தொலைபேசி மூலம் தெரிவிக்கலாம்!

கொழும்பு, ஓக. 06

ஜனாதிபதி தேர்தலின்போது பொலிஸ் மற்றும் ஏனைய அரச அதிகாரிகள் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் முறைப்பாடுகளை அறிவிக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொலைபேசி இலக்கங்களை அறிவித்துள்ளது. இதன்படி, 0767914696 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது 0112505566 என்ற தொலைநகல் இலக்கத்திற்கோ முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும். (அ)

# பிரதமர் பதவிக்கு கையேந்தியது போல் உலகில் வேறு எந்த நாடாவது உள்ளதா?

## திருமலையில் கேள்வி எழுப்பிய ஜனாதிபதி ரணில்

திருமலை, ஓக. 06

"பிரதமர் பதவியை ஏற்குமாறு அறிவித்தபோது தப்பியோடியது யார்? பிரதமர் பதவிக்கு கையேந்தியது போன்று வேறு எந்த நாடாவது உலகில் இருக்க முடியுமா? எனது நண்பர் அனுரகுமார திசாநாயக்கவும் அப்போது ஓடி ஒழிந்தார்."

-இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

திருகோணமலை மாவட்ட அரசியல் செயற்பாட்டாளர்களுடன் நேற்று முன் தினம் நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டின் அப்போதைய நிலையை நான் நினைவுகூரத் தேவையில்லை. சிலரது வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டன.

ஊருக்கு வரக்கூடாது என அச்சுறுத்தினர்.

ஆனால் 2022 ஜூலை மாதத்தில் நாட்டின் மீட்சிக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்தோம்.

இந்த அமைச்சர்கள், எம்.பிக்கள் அனைவரும் எங்களுடன் இணைந்து, 2023ஆம் ஆண்டுக்குள் இந்த நாட்டின் பொருளாதாரத்தை வழமை நிலைக்கு கொண்டு வர முடிந்தது.

இப்போது எம்மால் வங்குரோத்து நிலையில் இருந்து மீள முடிந்துள்ளது. சர்வதேச நாணய நிதியம் மற்றும் எங்களுக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் பேச்சு நடத்தி உடன்பாட்டை காண முடிந்தது.

2042 வரை எங்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் விதிமுறைகளை மீறினால், அந்த சலுகைகளை இழக்க நேரிடும்-என்றார். (அ)

பொலிஸ்மா அதிபர் விவகாரம்

# உயர்நீதிமன்றத்தின் உத்தரவை சபாநாயகர் பின்பற்றவேண்டும்

கொழும்பு, ஓக. 06

பொலிஸ்மா அதிபர் விவகாரம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் உத்தரவை சபாநாயகர் மகிந்த யாப்பா அபயவர்த்தன பின்பற்றவேண்டும் என சட்டமா அதிபர் கேட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபரிடம் சபாநாயகர் ஆலோசனையை கோரிய நிலையிலேயே சட்டமா அதிபர் இதனை தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் விவகாரம் தொடர்பில் முழுமையான ஆலோசனை அறிக்கையை தயாரிக்கும் நடவடிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

சமீபத்திய சட்ட சிக்கல்களின் மத்தியில் சபாநாயகர் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பது குறித்து இந்த அறிக்கை வழிகாட்டுதல்களை வழங்கும்.

இந்த விவகாரம் தொடர்பில் பிரதம நீதியரசரின் ஆலோசனைகளை பெறப்போவதில்லை என சபாநாயகர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேர்தல் தோல்விக்கு அஞ்சுவோரே கட்சித் தாவலில் ஈடுபடுகின்றனர்!

## பெரமுன எம்.பி. கூறுகின்றார்



கொழும்பு, ஓக. 06

தேர்தல் தோல்விக்கு அஞ்சுபவர்களே இன்று கட்சித்தாவலில் ஈடுபட்டு வருவதாக பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட அமைப்பாளர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல் இலாபம் கருதி பொதுஜன பெரமுனவில் இருந்து பலர் கட்சித் தாவல்களில் ஈடுபட்டுள்ளபோதிலும் கட்சியின் ஆதரவாளர்கள் ஒருபோதும் விலகிச் செல்லமாட்டார்கள்.

ஒரு சிலரின் செயற்பாடுகளினாலேயே பொதுஜன பெரமுன இன்று இவ்வாறான ஒரு நிலையை எதிர்கொண்டுள்ளது.

தேர்தல் வெற்றி தொடர்பில் பலர் இன்று விமர்சிக்கின்றனர். எத்தகைய விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் மக்கள் ஆதரவு பொதுஜன பெரமுனவுக்கே உள்ளது.

பொதுஜன பெரமுன வீழ்ச்சியடைந்துள்ளதாக இன்று பலர் விமர்சிக்கின்றனர். நாம் ஒரு போதும் கட்சியின் கொள்கைகளுக்கு முரணாகச் செயற்படமாட்டோம்.

பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்தால் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகளுக்கு அமையவே செயற்படவேண்டும்.

அதேபோல் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தால் சஜித் பிரேமதாஸவின் கொள்கைகளுக்கு அமையவே செயற்பட வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.